விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆடி 28 ஜூலகஸ் 6 இதழ் 184

யாழ்ப்பாணம் புதன்கிழமை 13-8-1986

## 'தமிழ்போராளிகளுடன்பேச்சு அரசை வற்புறுத்துவோம்'

கொழும்பு, செவ்.

தமிழ்ப் போராளிக் குழுக்களுடன் பேச்சுக்கள் நடத்துமாறு இலங்கை அரசை வற்புறுத்தப் போவதாக கூட்டணிச் செயலதிபர் திரு. அமிர்தலிங்கம் கொழும்புப் பத்திரிகையொன்றுக்கு அளித்த போட்டியில் கூறியுள்ளார்.

இந்தத் தொலைபேசிப் பேட்டியின் போது. தமது அடுத்த கொழும்புக்கான விஜயத்தின் போது, கிழக்கு மாகாணத்தின் நிலைகுறித்து முஸ்லிம் பிரமுகர்களுடன் பேச்சுக்கள் நடத்தப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கல்முனையில் நடைபெற்ற அசம்பாவிதங்கள் குறித்துத் தனது கவலையையும் வெளியிட்டுள்ளார்.

இதே வேளை அரசுக்கும்கூட்டணியினருக்கும் இடையே எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் திங்கட்கிழமை வரை பண்டாரநாயக்கா சர்வதேச மாநாடு மண்டபத்தில் பேச்சுக்கள் நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. (கூ-மா

# 'உடல்-உள ரீதியாக 'ராகிங்'கில் ஈடுபடமாட்டோம்!'

## பல்கலைக்கழகமாணவர் அமைப்புகுழு உறுதி!

யாழ்ப்பாணம், புதன்

" 'ராகிங்' என்ற போர்வையில் எந்தவொரு மாணவனையும் உடல்-உள ரீதியாக துன்புறுத்தமாட்டோம்" என்று யாழ். பல்கலைக்கழக மாணவர் அமைப்புக் குழு உறுதியளித்துள்ளது. 'ராகிங்' சம்பந்தமாக எழுந்துள்ள சர்ச்சைகள் குறித்து மேற்படி அமைப்பு விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தின் சகல பீட மாணவர்களினதும் அனுசரணையுடன் நேற்று 'ராகிங்' பிரச்னை குறித்து தீர்வுகாண நடவடிக்கைக் குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

இதனையடுத்தே 'ராக்கிங்' பிரச்னை குறித்த அறிக்கை ஒன்றும் யாழ். பல்கலைக்கழக மாணவர் அமைப்புக் குழுவினால் வெளியிடப்பட்டது

அந்த அறிக்கையில் மாணவர் அமைப்புக் குழுவினால் விடுக்கப்பட்டுள்ள ஏனைய உறுதி மொழிகள் வருமாறு;

'ராக்கிங்' சம்பந்தமான பிரச்னைகளை கண்காணிப்பதற்காக மாணவரால் தெரிவு செய்யப்பட்ட கண்காணிப்புக்குழுவுக்கு மாணவர் அனைவரும் கட்டுப்பட்டவர்கள் என உறுதியளிக்கின்றோம்.

'ராகிங்' சம்பந்தமாக நிர்வாகம் எடுக்கும் நியாயமான எந்த நடவடிக்கைளுக்கும் எதிராக மாணவர்களாகிய நாம் எதிர் நடவடிக்கையில் இறங்க மாட்டோம் என உறுதியளிப்பதுடன் நிர்வாகத்துக்கு பூரண ஒத்துழைப்புக்கொடுப்போம்.

இக்கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு குறிப்பிட்ட காலஅவகாசம் கொடுக்சப்பட்டும், அவர்கள் இது தொடர்பாக இறுதி முடிவுகோர முடியாத பட்சத்தில் நாம் போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபட உள்ளோம்

மாணவர் அமைப்புக்குழுவின் இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

[5-ம் பக்கம் பார்க்க]

## மாகாணசபை எதிர்ப்பு: ஜே.வி.பி. ஆதரவை ஸ்ரீ. ல. சு. க. நாடுகிறது!

கொழும்பு. செவ்

அரசின் உத்தேச மாகாண சபைத்திட்டத்தை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியுடன் இணைந்து எதிர்க்குமாறு தடைசெய்யப்பட்டுள்ள ஜனதா விமுக்தி பெரமுனைக்கு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அனுரா பண்டாரநாயக்கா அழைப்பு விடுத்துள்ளார்.

வாரியப்பொலவில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே திரு. பண்டாரநாயக்கா இந்த அழைப்பை விடுத்தார்.

இதுபற்றி கொழும்பு பத்திரிகையொன்று திரு பண்டாரநாயக்காவுடன் தொடர்பு கொண்டபோது தாம் கூறியதை அவர் ஏற்றுக்கொண்டுள்ளார். அத்துடன் ஜே. வி பி மாத்திரமே இலங்கையிலுள்ள உண்மையான இடதுசாரிக்கட்சியொன்றும் திரு பண்டாரநாயக்கா கூறியுள்ளார்.

இதேவேளை திரு. பண்டாரநாயக்காவின் இக்கூற்றுபற்றி தேசிய பாதுகாப்புச்சபைக் கூடியபோது ஆராய்ந்ததாகத் தெரியவருகிறது. [கூ-ஊ]

## விஞ்ஞானபீட மாணவர் பிரசுரம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ் பல்கலைக்கழக விஞ்ஞானபீடமாணவர்கள் 'விழிப்பாயிருப்போம்' என்ற தலைப்பிட்ட பிரசுரம் ஒன்றைவெளியிட்டுள்ளது.

அப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது!

"இம்மாதம் 11ம் திகதி அன்று யாழ் பல்கலைக்கழக 1ம்

[5ம் பக்கம் பார்க்க]

## கல்முனையில் 3 முஸ்லிம்கள் கொலை 20 வீடுகள் தீ வைப்பு

[கல்முனை நிருபர்]

கல்முனையில் முஸ்லிம் கிராமத்துக்துள் புகுந்த இனந்தெரியாத கோஷ்டியினர் சுமார் 20 வீடுகளுக்குத் தீவைத்தனர். 3 முஸ்லிம்கள் கொல்றப்பட்டனர் 12 முஸ்லிம்கள்படுகாயமடைந்தனர்

நேற்று அதிகாலை இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றன.

கடந்த இரு நாட்களாக கல்முனையில் முஸ்லிம் கோஷ்டி ஒன்று தமிழர்களுக்குச் சொந்தமான வீடுகள், கடைகள் உட்பட 25 கட்டிடங்களுக்கு தீ மூட்டி எரித்ததுடன், பல தமிழர்களைக் கொலை செய்தும் காயப்படுத்தியுமிருந்தது தெரிந்ததே

இச்சம்பவத்தினால் ஆத்திரம் கொண்ட இனந்தெரியாத

(5-ம் பக்கம் பார்க்க)

## கூட்டணி இவ்வாரம் கொழும்பு வரும்

கொழும்பு, புதன்.

இலங்கை இனப்பிரச்னைக்கு தீர்வு காணும் முகமாக ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவுடனான பேச்சுக்களை மீண்டும் தொடர்வதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணியினர் நாளை வியாழக்கிழமை அல்லது வெள்ளிக்கிழமை கொழும்பு வருவார்களென எதிர்பார்க்கப்படுகிறது

[5-ம் பக்கம் பார்க்க]

## மூதூரில் டென்மார்க் பிரஜை சுட்டுக் கொலை!

மூதூர், செவ்.

காரில்சென்றுகொண்டிருந்த டென்மார்க் பிரஜைகள் இருவர் இனந்தெரியாததுப்பாக்கி இளைஞர்களினால் சுடப்பட்டனர். கணவன் ஸ்தலத்தில் பலியானார். மனைவி உயிர் தப்பியுளளார்.

இச்சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் திருகோணமலையில் உள்ள சாம்பல்தீவு சந்தியில் நடைபெற்றது.

சுடப்பட்டு இறந்த டென்மார்க் பிரஜை வீடமைப்புத் திட்ட அதிகாரியாவார் இவர் பெயர் திரு கிம்-யோண்சன்ஸ் இவர் மனைவி பெயர் திருமதி ஜெலன் ஜோண்சன்ஸ் ஆகும்.

திருகோணமலை 'மான்கானை' என்ற இடத்தில் டென்மார்க் அரசாங்க உதவியுடன் கட்டப்பட்டுவரும் வீடமைப்புத் திட்டத்தினை மேற்பார்வையிடச் சென்றபோதே இந்த டென்மார்க்அதிகாரியை சாம்பல் தீவு சந்தியில் வைத்து துப்பாக்கிகளுடன் நின்ற இரு இளைஞர்கள் அவரது காரை வழிமறித்து துப்பாக்கியால் சுட்டனராம்.

துப்பாக்கிச்சூட்டுக்குயோண்

(5-ம் பக்கம் பார்க்க)

## கல்முனைக் கலவரம்: சாவகச்சேரி முற்போக்கு முஸ்லிம் இயக்கம் கண்டனம்

யாழ்ப்பாணம், புதன்

"கல்முனை பகுதியில் கடந்த 10ம்திகதிநடைபெற்றமுஸ்லிம் தமிழர் கலவரத்தையறிந்து வடபகுதி முஸ்லீம்கள் அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளார்கள்" என்று கல்முனை கலவரத்திற்கு கண்டனம் தெரிவித்து முஸ்லீம் முற்போக்கு இயக்க சாவகச்சேரி கிளை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கல்முனையில் அன்னியோன்னியமாக வாழ்ந்த முஸ்லீம்களும் தமிழர்களும் இரு கூறுகளாகப்பிரிந்து சண்டையிட்டு பல உடமைகளையும், பல உயிர்களையும் பறிகொடுத்து, ஒரு நோக்கமும் இல்லாமல் குளத்தைக்கலக்கிப் பருந்துக்கிரை கொடுப்பது போல் பேரினவாத சக்திகளுக்கு வழியமைத்துள்ளனர்

எங்கேயோ நடந்த தவறை மதத்திற்குள் புகுத்தி பூதாகர

[5-ம் பக்கம் பார்க்க]

## கோட்டை அருகே மண்மூடை அரண் குறித்து ராணுவ அதிகாரி எச்சரிக்கை!

யாழ்ப்பாணம், செவ்.

யாழ் கோட்டை முகாமைத் தாக்கும் நோக்குடன் அம்முகாமெதிரில் அமைக்கப்பட்டுள்ள மண்மூடை அரண் உடனடியாக அகற்றப்பட வேண்டும். தவறினால் பாரதூரமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய நிலைக்குள்ளாவோம்"

இவ்வாறு யாழ் கோட்டை முகாமருகில் சமீபத்தில் மணல் மூடைகளைக்கொண்டு அமைக்கப்பட்டுள்ள அரண்கள் சம்பந்தமாக வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்றிற்கு அளித்த பேட்டியிலேயே இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர்மேலும் அச்செய்திநிறுவனத்திற்கு தெரிவித்ததாவது: கோட்டை முகாமைத் தாக்கும் நோக்குடன் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படும் மண்மூட்டை அரண் மூலம் ஏற்படுகின்ற பாதிப்புக்களை அப்பாவி மக்கள் ஏற்கக் கூடிய துர்ப்பாக்கிய நிலையில் உள்ளது வருந்தத்தக்கதே. முகாமுக்கருகிலுள்ள மக்கள் தம்மைத்தாமே பாதுகாக்க வேண்டுமென தெரிவித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ச)

## செல்வா ஸ்தூபி அருகே இளைஞர் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், செவ்.

யாழ் கோட்டை இராணுவ முகாமை நோக்கிச் சென்ற இளைஞர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்.

நேற்று முன்தினமிரவு தந்தை செல்வநாயகம் ஸ்தூபியை அண்மித்துச் சென்று

[5-ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல இன வளர்ப்பு மீன்கள் மலிவு விற்பனைக்கு உண்டு 'இரத்தின வாசா' கருவேலடி லேன் (பழைய புகையிரத வீதி) கொக்குவில் கிழக்கு. [C-4036]

புடவைக்கடை, சாய்ப்புக் கடைகளுக்குரிய நல்ல நிலைமையிலுள்ள கண்ணாடி அலுமாரிகள் விற்பனைக்குண்டு கணேசன் ஸ்ரோர்ஸ், 63, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் [C-4025]

No 1 நெல்லுகுத்தும் அல்வர் சோமசிறி நெல் உடைக்கும் 20 H. P. மோட்டர் அன்ட் ஸ்ராட்டர், 3 H P. மோட்டர் உமி அடுப்பு என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு:- சு செல்வநாயகம் 'கணேசன் மில்' K. K. S. ரோட், இணுவில். [C-4037]

Sony T.V. 2032, Sharp T V 20'' Video Deck National NV 7500, Video Deck National NV 390, Generator-900 watts. Car A-40 உரிமையாளர் வெளிநாடு செல்வதால் மலிவு விலையில்பெற அரியசந்தர்ப்பம். உடன்தொடர்பு கொள்க. வே. அமிர்தலிங்கம், பொன்னுவலை களபூமி, காரைநகர். [C-4021]

யாழ். மாநகரசபை எல்லைக்குள் கே. கே எஸ். ரோட்டுக்கு அருகாமையில் நல்ல சுற்றுடலில் சிறிய வீட்டுடன் 1½ பரப்புக்காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க. மாசிலாமணி 14, கேசாவில் பிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம். [C-4031]

அளவெட்டி வடக்கிலும் கும்பிழாவளைப் பிள்ளையார் கோவிலுக்கு மேற்கு வீதியிலும் உள்ள கட்டையன் சீமா என்னும் 10 நில பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க:- திருமதி. தர்மலிங்கம் கேணிக்கரை அளவெட்டி. (C 3987)

### சேவை

தெளிவான போட்டோ ஸ்ரற் பிரதிகள், ரோனியோ பிரதிகளை குறைந்த செலவில் பெற்றுக்கொள்ள கிளீன் கட், 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். [C-4022]

வெளிநாடு செல்வதற்குத் தேவையான பாஸ்போட், விஸா, பொண்ட், ரிக்கற்றிங், ரவலச்செக் என்பவற்றைக் குறைந்த செலவில் உடனுக்குடன் செய்துகொள்ள Arrkay and Sons, 129, Stanley Road, Jaffna. Telephone 24029, 18, 1/8, Muthalige Mawatha, Colombo. Telephone: 540581. (C-3942)

உங்கள் உணவில் உருசி சேர்க்கவும், திடீர் விருந்தினரை சமாளிக்கவும், கத்தரி பிக்கிள், வாழைக்காய்பிக்கிள், இறால் பிக்கிள், இறைச்சி பிக்கிள், அச்சாறு இவைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள வ. வஸ்தியாம்பிள்ளை, சுண்டிக்குளி, தயாரிப்பு: புதுவாழ்வு நிலையம், ஆனைக்கோட்டை. [C-4041]

கலர் பிலிம் சுருள்களை PROCESSING + PRINTING செய்வதற்கு கொழும்பு ஸ்ருடியோ

(A 1041)

### வகுப்புகள்

G C.E. A/L 87-ம், 88-ம் ஆண்டுகளுக்கான மனைப் பொருளியல் வகுப்புகளும், செயல்முறை வகுப்புகளும் ஆரம்பமாகின்றன. விபரங்கட்கு: G S Ladies Academy, Victoria Road, Jaffna. (C 4018)

### தவறிவிட்டது

குரும்பசிட்டி சொர்ணலிங்கம் என்பவருடைய ஏசியா 08AB4951 இலக்கமுடைய சைகிள் கம்பனி பற்றுச் சீட்டும் உத்தரவாத அட்டையும் மல்லாகத்துக்கும் சுன்னாகத்துக்கும் இடைப்பட்ட இடத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சுன்னாகம் வாணி கல்விநிலயத்தில் ஒப்படைக்கவும். [C-4035]

### தேவை

எமது தொழிற்சாலையில் பப்படம் தயாரிக்கத் தெரிந்த ஆண்கள் உடன் தேவை. சீ. கே. எஸ். அம்பாள் இன்டஸ்ரீஸ், மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி என்ற விலாசத்தில் நேரில தொடர்புகொள்ளவும். தகுந்த சம்பளமும் சலுகைகளும் வழங்கப்படும். [C-4024]

### 1-வது ஆண்டு நினைவஞ்சலி



காசிநாதர் சிவசுப்பிரமணியம்

பிறப்பு: 5-09-1942
இறப்பு: 25-07-1985
திதி: 13-8-1986

அன்புடனும், பாசத்துடனும் வாழ்ந்து எம் மையெல்லாம் ஆறுத்துயரில் ஆழ்த்திவிட்டு திடீரென மீளாத்துயில் கொண்ட எம் அன்புத் தெய்வமே! உங்கள் மதிமுகமும், சொல்லும், செயலும் எங்களால் மறக்க முடியாது. நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஒன்றரை வருடங்கள் சென்றாலும் உங்கள் நினைவு எங்களை விட்டகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம். தங்கள் பிரிவால் துயருறும்:

மனைவி, பிள்ளைகள், மாமன், மாமி, மைத்துனர்கள், சகோதரி சகோதரர்கள், நண்பர்கள், சகஊழியர்கள்.

ஏழாலை வடக்கு.

(C 3958)

### மீட்டல் விரிவுரைகள்

கலைமாணி B A.
விஞ்ஞானமாணி B. Sc (புள்ளிவிபரவியல்
வணிமுதற் தேர்வு (First-in-Commerce)

**ஆரம்பம்: 16-8-1986**

முதுகலைமாணி M. A. கலாநிதி (Ph D) பட்டம் பெற்ற பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் எமது நிறுவனத்தில் மட்டுமே விரிவுரைகளை வழங்குவர்.

உதவிப்பதிவாளர்
பட்டப்படிப்புகள் கல்லூரி,
(வெளிநிலைப் பரீட்சைப்பகுதி)
(C 4038) 148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

### 'ஷெல்' தாக்குதல்

வவனியா, செவ்வாய் மன்னார் தள்ளாடி ராணுவ முகாமிலிருந்து சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று 'ஷெல்'கள் ஏவப்பட்டன. பெரும்பாலான 'ஷெல்'கள் பரப்புக்கடந்தானை நோக்கியே ஏவப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஊ)

### 31-ம் நாள் நினைவஞ்சலி



தாமரைச்செல்வி [பானு]
மலர்வு: 22-08-1967
உதிர்வு: 13-07-1986

தாமரைச் செல்வி,
ஈழமக்களின்
இடர்கள் களைந்திட
இன்னுயிர் ஈத்த எங்கள்
நெஞ்சமே
வஞ்சகர் மத்தியில
வஞ்சியர் வாழ்ந்திட
வழிவகை காட்டிய
அன்புவடிவமே
ஈழமக்களின் புரட்சி
விடுதலைக்கு
முன்னணி வகித்த நின்
பணிகண்டு ஈழமக்கள்
இன்புற்றிருந்த வேளை,
அகன்ற வானில்
அழகாய் ஜொலித்த
நட்சத்திரம்
இடை நடு வேளையில்
உதிர்ந்ததுபோல
விடுதலை வேள்வியில்
நின்பலிகண்டு
எங்கள் இதயம்
கொட்டுது உதிரம்
தாலாட்டி வளர்த்த
தாயவள் தவிக்க
ஆதரவு காட்டிய
அண்ணன்மார் ஏங்க
உறுதுணை புரிந்த
உறவினர் கலங்கிட
உத்தமி உந்தன் உயிர்
உதிர்ந்ததேன்!
தாரகை நடுவன்
தண்மதிபோல
தரணியில் வாழ்ந்த
தாமரைச் செல்வீ,
தார்மீக அரசின்
தறுதலைப் படைகளின்
துப்பாக்கிக் குண்டுகள்

உன்உயிர் எடுத்ததே. உன்உடல்பட்ட துப்பாக்கிக் குண்டுகள் நிச்சயம் சுவர்க்கத்தின் சிகரத்தை எட்டும். தூயவளே நிந்தன் ஆத்மா சாந்தி அடைய தேவனை தினமும் வேண்டி நிற்போம். சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பாசத்தாய்,
சகோதரர்கள்,
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

பாலைக்குளி,
அடம்பன், [C 4027]

### நாதஸ்வர, தவில் பயிற்சி பாடசாலை

மாவிட்டபுரம், செவ் பாரம்பரியக் கலைகளான நாதஸ்வர, தவில் கலைகளை வளர்க்குமுகமாக நாதஸ்வர தவில் பயிற்சிப்பாடசாலை ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் தலைமையில் இயங்கும் யாழ் மாவட்ட கலாசார பேரவையின் ஆதரவில் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான கட்டிடத்தில் இப்பாடசாலை அமையவிருக்கிறது.

இப்பாடசாலையை அமைப்பது தொடர்பாக ஆராய தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் ஆலோசனைக் கூட்டமொன்று நடைபெற்றது.

யாழ் அரசாங்க அதிபர் வலி வடக்கு உதவியரசாங்க அதிபர் உட்பட பல அரசாங்க அதிகாரிகளும் நாதஸ்வர தவில் கலைஞர்களும் இக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

பாடசாலைக்குப் பயிற்சியாளரைச் சேர்த்தல், ஆசிரியர்களை நியமித்தல், இசைக்கருவிகளை வாங்குதல் போன்ற பல்வேறு ஏற்பாடுகன் குறித்து இக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. [எ]

### ஈராண்டு நினைவஞ்சலி



தென்மராட்சி மேற்கு ப நோ. கூ. சங்க ஊழியராய் பணிபுரிந்து, அரச படையால் பணியகத்தில் கொல்லப்பட்ட

செல்வன்
சி. சூரியகுமாரன்

அன்னையின் மடியில்:
18-4-62
ஆள்பவன் பிடியில்:
13-8-84

ஓ எம் இனிய சோதரனே
மண்ணிடைப் பிறந்தது நீ
மாபெரும் காரியங்கள்
ஆற்றவென- நாம்
எண்ணி மகிழ்கையிலே
கொடுமதி படைத்த
கூலிப்படையின்
குண்டினை மார்பில் தாங்கி
விண்ணிடை
சென்றின்று ஈராண்டு
ஆனதுவோ,
நின்பிரிவால் துயருற்று
வாடும்,

அண்ணன்மார்.
அக்காமார், மைத்துனர்கள், மருமக்கள், நண்பர்கள், உறவினர்கள்.

குமாரத்தி பிட்டி
சனசமூக நிலையம்,
கைதடி மத்தி, கைதடி.
அ. பெனடிக்ற்.

(C3976)

### ஏழாம் ஆண்டு நினைவு தினம்



ஆறுமுகம்
பொன்னம்பலம்

இகம்: 22-9-1898
பரம்: 13-8-1979

மண்ணுலகு நீத்து விண்ணுலகடைந்த சித்த வைத்தியமேதை அமரர் ஆறுமுகம் பொன்னம்பலம் (பரமர்) அவர்கள் மறைந்து இன்றுடன் ஏழுவருடங்கள்பூர்த்தியாகின்றன. பாரம்பரிய சித்தவைத்திய முறைக்கும் தேசிய வைத்திய முறைக்கும் மெருகூட்டிய வைத்தியர் பரமர் ஐயா அவர்களின் வைத்தியசேவையினை தாவடி மக்கள் மட்டுமல்ல, ஏனையோருமே இலகுவில் மறந்துவிட முடியாது.

அன்னாருக்கு அகில இலங்கை சித்தவைத்திய சங்கம் தனது மனப்பூர்வமான அஞ்சலிகளையும், வணக்கங்களையும் சமர்ப்பித்துக் கொள்வதன் மூலம் பெருமைப்படுகின்றது.

அகில இலங்கைச் சித்த வைத்திய சங்கம்.

[C 4034]

### IN MEMORIAM





F. M. SINNADURAI — Died: 9-8-61

ROSALIND SINNADURAI — Died: 13-8-81

Eternal Rest grant to them O Lord
Children and Grand Children
(A 1128)

### மணிவாக்கு

பாதிப்புக்குள்ளான ஒரு மனிதனுக்கு நாம் வழங்கக்கூடிய உண்மையான உதவி யாதெனில் அவனுடைய பாரத்தை வாங்கிக்கொள்வதல்ல, அந்தப் பாரத்தைத் தாங்கிக்கொள்ளக்கூடிய சக்தியை அவனில் உருவாககுவதே!

— பிலிப்ஸ் புருக்.

## நமது நோக்கு

### பேச்சுவார்த்தை தோல்வியுற்றால்!

''மாகாண சபைத் திட்டம் எக்காரணம்கொண்டும் தோல்வியுற்றால் ராணுவ தீர்வுதான் ஒரே வழி' என அண்மையில் அறிவித்த ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜயவர்தன. அப்படியான ஒருநிலை வருமானால் சிங்கள மக்கள் அனைவரும் தமக்குப் பின்னால் அணிதிரளவேண்டும் என கூறியிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கும்.

இந்த மாகாணசபை திட்டம் தொடர்பாக அரசுடன் பேச்சுவார்த்தைகள் நடத்திவரும் தமிழர்விடுதலைக்கூட்டணியின் தலைவர்களில் ஒருவரான திரு அ. அமிர்தலிங்கம் சிலதினங்களுக்குமுன் சென்னையில் ஒரு கூட்டத்தில் பேசியபோது இப்போதைய பேச்சுக்கள் தோல்வியுற்றால் தமிழருக்கு ஏற்படக்கூடிய தர்மசங்கடமான நிலையை எடுத்துக்கூறியிருக்கிறார்.

பேச்சுக்கள் தோல்வியுற்றால் இன்னும் பலமடங்கு உக்கிரமான போர் ஒன்றை நடத்த இலங்கை அரசு தயாராகவுள்ளது என்பதில் சந்தேகம் வேண்டாம். அதனை ஜனாதிபதியே உறுதிப்படுத்தியுள்ளார். போரின் விளைவுகள் பற்றி பல அமைச்சர்கள் எடுத்துக்கூறிவருகிறார்கள் என்றாலும் எதிர்க்கட்சிகள் சிலவும், பலம்வாய்ந்த பிக்குமார் இயக்கங்களும் நடத்திவரும் போராட்டங்கள் உக்கிரமடைந்தால் மாகாணசபை யோசனைகள் கைவிடப்படலாம். அதையடுத்து ஏற்படக்கூடிய விளைவுகளைத் தமிழ்மக்கள் எங்ஙனம் எதிர்நோக்கப்போகிறார்கள்?

இதைக் கருத்தில் கொண்டே திரு அமிர்தலிங்கம் சென்னையில் பேசியிருக்கிறார்.

இன பிரச்னைக்கு அரசியல் தீர்வுகாண தற்போது மேற்கொள்ளப்படும் முயற்சிகள் தோல்வி அடையுமானால் இலங்கைத் தமிழர்களை காப்பாற்றி அவர்கள் விடுதலைபெற இந்தியா உதவவேண்டும் என்பது அவர்கருத்து

எதுவானாலும் இப்போதைய முயற்சிகள் தோல்வியுறக் கூடாதென்பதே இந்தியாவின் நிலைப்பாடு. ஏதோ காரணத்தினால் அது தோல்வியுற்றால் இந்தியாவின் பொறுப்பு இன்றைய நிலையைவிட பன்மடங்கு முக்கியமானதாக இருக்கும் ஏற்கனவே அரச அட்டூழியங்களைச் சகிக்க முடியாமல் இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ள இலங்கைத் தமிழர்களை வைத்து பாதுகாத்துவரும் இந்திய அரசு, இலங்கைத் தமிழர் அனைவரையுமே தஞ்சம் புகுந்தவர்களாகக் கருதிப் பாதுகாத்திட வேண்டிவரும்.

எது எவ்வாறாயினும் பிரச்னைகள் முனைப்படைந்து வரும் இவ்வேளையில் தமிழ் பிரதேசங்களில் வாழும் தமிழ்மக்கள் புதிதாக உருவாகக் கூடிய சூழ்நிலைக்கு ஏற்ப தம்மைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

குறிப்பாக உணவு உற்பத்திகள், பொருள் சேமிப்புகள், தற்பாதுகாப்புகள் போன்றவற்றில் நீண்ட நாட்களுக்குத் தாக்குப் பிடிக்கும் வகையில் கவனம் செலுத்துதல் அவசியம்.

### ஜெனரல் வைத்யாவின் படுகொலை

இந்தியாவின் முன்னைநாள் ராணுவ தளபதி ஜெனரல் அருண் வைத்யாவின் படுகொலை இந்தியத் தலைவர்களை பெரிதும்கலக்கிவிட்டிருக்கின்றது.

1984ல் பஞ்சாப்பில் சீக்கியரின் பொற்கோயிலுக்குள் இந்திய ராணுவம் நுழைந்த அன்று தொடக்கம் பஞ்சாப் தீவிரவாதிகள் இவர்மீது கண்வைத்து வந்துள்ளார்கள்.

ஓர் அரசின் படைத்தளபதி என்றமுறையில் அவ்வரசின் பணிப்பை நிறைவேற்றுவதே அவர் தம் கடமையாகக்கருதி வந்தாரேயன்றி, பொற்கோயிலுக்குள் படைகளை நகர்த்தும் திட்டம் அவருடையதல்ல. அதற்குப் பொறுப்பாக இருந்த இந்தியத்தலைவர் திருமதி இந்திராகாந்தியை ஏற்கனவே பஞ்சாப் தீவிரவாதிகள் பலிகொண்டுவிட்டார்கள். முன்னாள் பஞ்சாப் முதலமைச்சர் திரு. லோங்கோவாலும் இவர்களின் துப்பாக்கிக்கு இரையானார். தற்போதைய முதல்வர் பர்னாலாவின் உயிருக்கும் உலைவைக்க முயற்சிநடந்துள்ளது.

தீவிரவாதிகளின்கொலைப் பட்டியலில் இன்னும் பல பேரின் பெயர்கள் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை பஞ்சாப் தீவிரவாதிகளை ஒடுக்கவும், அங்கு மாமூல் வாழ்க்கை நிலையை உருவாக்கவும் பெரும் முயற்சி நடத்தப்படுகின்றது.

''பஞ்சாப் தீவிரவாதிகளை தோல்வியுறச் செய்வோம்'' என இந்திய பிரதமர் சூளுரைத்துள்ளார்.

தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் பஞ்சாப் மக்களின் பரவலான செல்வாக்கைப்பெறாத நிலையில் பஞ்சாப் மக்களே தம் காரியங்களை நிர்வகித்துக் கொள்ளக்கூடிய நிர்வாக அமைப்பு இருப்பதால் தீவிரவாதம் அங்கு வெற்றி பெறுவது சாத்தியமில்லை.

மத்திய அரசின் தாராள மனப்பான்மையே போதும் அவர்களைத் தோல்வியுறச் செய்வதற்கு.

# இனப்பிரச்னைக்கு ஒரு பொருளாதாரத் தீர்வு

**அ. சோமசுந்தரம்பிள்ளை B.A. F.C.A.**
(தலைவர்ஆலோசக, நிதி, அபிவிருத்தி நிறுவனம்)

எமது இனப்பிரச்னைக்கு ஓர் அரசியல் தீர்வு. நேரடியாகப் பாதிக்கப்படுவோர் தவிர்ந்து உலகளாவ எல்லோராலும் வரவேற்கப்படும். நேரடியாகப் பாதிக்கப்படுவோர் வடக்குக், கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ் பேசும் மக்கள். இவர்கள் மேலோட்டமாக மூன்று பிரிவுட்படுவர்.

(அ) ஓரளவு பாதிப்புக்குள்ளானபோதும், சில வசதிகளுடன் வாழ்க்கையைத் தொடரக்கூடியவர்கள்- சம்பளம், ஓய்வூதியம், வியாபாரம், கண்ணியத் தொழில்களின் குறைந்துவிட்ட வருமானம்.

(ஆ) நிலையான வாழ்க்கையிலிருந்து அகதிமுகாம்கட்கும் சுற்றத்தவர், நண்பர்கள், நலன்விரும்பிகள் வீடுகட்கும் தூக்கியெறியப்பட்டவர்கள்.

(இ) இளைஞர், தகுந்த முறையிற் புனரமைப்புச்செய்யப்படவேண்டிய இயக்க இளைஞர்களும், வேலைவாய்ப்பெதுவும் தென்படாதநிலையில், வெளிநாடுகளில் அல்லலுறும் இளைஞர்களும்.

இதில் முதற்பிரிவினர், ஒரு அரசியல் தீர்வை ஆவலுடன் எதிர்நோக்குகிறார்கள். இரண்டாம் வகுப்பினர், ஆறுதற் பெருமூச்சு விடக்கூடுமெனினும், தமது நிலையிலிருந்து, எங்கே, எவ்வகையி ஆரம்பிப்பது என்று தெரியாமல் திகைத்து நிற்பர்.

ஆனால் இளைஞர்கள் ஒரு அரசியல் தீர்வைமட்டும் ஏற்க மாட்டார்கள். இவர்கட்கும் மறு பிரிவுகளிற் பலருக்கும் இக் கணக்கு சுலபமானது:-

மாவட்டசபை X எல்லா முயற்சிகள், மாகாணசபைக்குச் சமனல்ல. தமிழீழம் கிடைக்கப்பெறின், இவர்கள் தமது தியாகங்களையிட்டுப் பெருமைப்படுவதுடன், தொடர்ந்தும் தியாகப் பணியில் இன்னல்களை விரும்பி மேற்கொள்வர். ஈழம்தான் தீர்வு அல்லாதநிலையில், சமூகத்தில் இவர்கள் நிலையென்ன? சந்ததி, சந்ததியாக வரப்போகும் இளைஞர்களின் கதியென்ன? இதற்கு விடைபகராத எந்த அரசியற் தீர்வும் அர்த்தமற்றது.

இச் சந்தர்ப்பத்தில், இனப்பிரச்னைக்கு ஒரு பொருளியற் தீர்வு, அரசியல் தீர்வைப் போன்ற அல்லது அதனிலும் மேம்பட்ட முக்கியத்துவம் பெறுகிறது. இன்று சுமாதானத்திற்குப் பேரம் பேசுவோர்க்கு இது தெரியாமலிருக்க நியாயமில்லை. ஆனால் இதைச் சம்பந்தப்பட்ட மக்களுக்கு எடுத்துக்காட்டாமலிருப்பதிலும் நியாயமில்லை.

இச் சூழலிற்தான், பலனுடையதென நான் கருதும் ஒரு பொருளியற்தீர்வில் அடங்கக்கூடிய அம்சங்களைக் குறிப்பிடவிரும்புகிறேன்.

எமது இன்றைய நிலையின் காரணிகள்:

(அ) வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பல்லாண்டுகாலப் பொருளாதாரப் புறக்கணிப்பின் திரட்சி

(ஆ) கலவரங்களில் ஏற்பட்ட பொருளாதார அழிவுகள்.

(இ) நெருக்கடி தொடங்கிய காலம்தொட்டுச் செயற்படுத்தாத அபிவிருத்தி மட்டுமன்றிப் பராமரிப்பும்.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் திட்டமிட்ட பொருளாதார அபிவிருத்தி என்றும் செயற்பட்டதில்லை. நூற்றாண்டுகாலமாகத் தமிழர் கல்விக்கு முக்கியமளித்து, சம்பளம் நிர்ணயிக்கப்பெற்ற வேலைகளை, முதல் அரசாங்கத்திலும், பின் தனியார் துறையிலும், இவை அருகிப்போக பிறநாடுகளிலிலும் தேடிப் பெற்றனர். இப்படியாகக் கற்றோர் சம்பளவேலைக்குப் போக, பொருளாதார அபிவிருத்திக்கு தலைமைத்துவமோ, முதன்மைத்துவமோ இருக்கவில்லை கற்றோர் தன் நிறைவுடனிருக்கையில், மற்றோரின் குறைகளை எடுத்தியம்ப எதுவித ஆர்ப்பரிப்புமிருக்கவில்லை இது சென்ற நூற்றாண்டில். அரசாங்கங்கட்கு வசதியாகவும் ஆறுதலளிப்பதாகவும் இருந்தது. 1980ல் மாவட்டசபைகள் தத்தமக்குரிய வளங்களைப் பட்டியற்படுத்தும்போது. போர்த்துக்கேயர் ஆட்சிக்கு முற்பட்ட காலத்துக் குளங்கள், திருத்தவேண்டியவையும் பாவனையற்றவையுமென்று, பட்டியல்களை நிரப்பியதில் வியப்பில்லை. சம்பள உத்தியோகம் பெறமுடியாத பெருந்திரளான மக்கள், பண்டைய குளக்கரைகளிற் செறிந்தும், கடற்கரையோரங்களில் வலை வீசியும் உயிர் வாழ்ந்தனர்.

1980ல் மாவட்டசபைகள் திட்டங்கள் தீட்டினார்கள். அதேநேரத்தில், இனப்பிரச்னை தீவிரமடைந்தது காரணம். இந்தப் பரிகாரத் திட்டங்களையேனும் செயற்படுத்த, இச்சபைகட்கு அதிகாரமோ நிதியோ இருக்கவில்லை.

### தீர்வு

கீழே குறிப்பிட்ட பிரிவுகளில் சுமார் மூன்று தொடக்கம் ஐந்து ஆண்டுகளிற் பூர்த்திசெய்யக்கூடிய துரித அபிவிருத்தித்திட்டமொன்று ஓரளவிற்கு பிரச்னையைத் தீர்க்க உதவுமெனத் தோன்றுகிறது.

### மீன்வளம்

நாட்டின் மறுபகுதிகட்கு மகாவலிபோன்று வடக்கின் மீன் அகங்கள் (Fish Banks) வடக்கிற்குப் பொருளாதார நன்மைகள் பயக்கவல்லவை. 1980 ல் இலங்கையின் மொத்த மீன்பிடி 184,000 தொன். ஆனால் இதேயாண்டு யாழ் மாவட்ட சபையின் கணிப்புப் பின்வருமாறு - வடக்குப் பகுதியின் இயல்பு ஒருசதுர மைலுக்கு 110 தொன். இதனடிப்படையில் வடபகுதியின் கரையிலிருந்து 5 மைல் தூரத்திற்குட்பட்ட 1015 சதுரமைல்களின் வளம், வருடத்திற்கு 100,000 தொன்னாகும் ஆனால் யாழ் பகுதியின் பெருநிலத் தரவை (Continental Shelf) யின் விஸ்தீரணம் 3360 சதுர மைல்கள். கரையிலிருந்து 5 மைல்கட்கு அப்பாலுள்ள மிகுதிக் கடற்பரப்பில் ஆண்டுக்கு 300,000 தொன் மீன்வளமுண்டு இவ் வளங்கள், ஒரு காலத்திலும் சம்பந்தப்பட்ட அமைச்சின் திட்ட அளவிலாவது சேரவில்லையென்பது இந்நாட்டின் பொருளாதாரத்திற்கு ஆட்சியாளர் இழைத்த பெருந்துரோகமாகும்.

### மீன்பிடித் துறைகள்

மீன்பிடித் துறைமுகங்கள் கிழக்குமாகாணத்தில் பொத்துவில், கல்முனை, வாழைச்சேனை வடக்கு மாகாணத்தில் கொக்கிளாய், முல்லைத்தீவு, தாளையடி, பருத்தித்துறை, மயிலிட்டி. மாதகல், அனலைதீவு, நெடுந்தீவு, குருநகர், பேசாலை தலைமன்னார், சிலாவத்துறை ஆகிய இடங்களில் அமைய வேண்டும். இவற்றுள் மயிலிட்டியில் வேலை ஓரளவு முடிந்திருந்தது வாழைச்சேனையில் டச்சு அரசாங்கத்தின் ரூ 1,100 லட்சம் உதவியிலிருந்து வேலை தொடக்கப்பட்டுள்ளது.

24 அடி வள்ளங்கள் கிழக்கு மாகாணத்திலும், வடக்கு மாகாணத்தில் கரைவலைக்கும் உகந்தது. எனினும் தாளையடியிலிருந்து தலைமன்னார் வரை கரைக்கப்பாலும் ஆழ் கடலிலும் மீன்பிடிப்பதற்கு 5 நாட் பயணங்கள் மேற்கொள்ளக்கூடியதாக குளிர் சாதனங்கள் பொருத்தப்பட்ட ஒரு 46 அடிக் கப்பலும் 3,24 அடி உதவிக் கப்பல்களுமான கூட்டுக்கள் செயற்படுத்தப்படல் வேண்டும்.

### விவசாயம்

விவசாயத் துறையில் போத்துக்கேயர் காலத்திற்கு முந்திய நீர் வளங்களெல்லாம் மீட்கப்படல் வேண்டும் வட-கிழக்கு மாகாணங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மேம்படுத்திப் புனரமைக்கவேண்டிய குளங்கள், பாவனையற்ற குளங்கள் என்று மாவட்ட சபைகள் பட்டியல்கள் தயாரித்திருந்தன வாய்க்கால் நீர்ப்

(4-ம் பக்கம் பார்க்க)

## நல்லை ஐயன் முருகையன்

ஓம் முருகா! ஓம் முருகா!! ஓம் முருகா!!! என்று தொழப்
போம்முன்னே நாம்செய்த பாவமெல்லாம்- ஆம் நிசமே
நல்லதிரு நல்லூரில் நாட்ட முட னேயுறையுஞ்
செல்வ அறு மாமுகனைச் சேர்

★ ★ ★ ★

ஔவைக் கருள்செய்த ஐயன் முருகையன்
கொவ்வைக் கனிவள்ளிக் கோன்முருகன் தெவ்வர்
வலிமை தனையடக்கி வானவரைக் காத்தோன்
நலிவார்க் கருள் புரிவான் நண்ணு.

★ ★ ★ ★

அஃதைக் கருள்பொழியும் ஐயனுயர் நல்லூரான்
அஃகிய ஞானம் அருளுவான் வெஃகும்
அடியார்க் கனுதினமும் அன்போ டருள்வான்
படியிலவன் பாதத்தைப் பற்று.

**கவியரசு வெண்பாமணி முருககூரியன்**

அஃதை- ஆதரவற்றவன், ஆதரவற்றவள்.
அஃகியஞானம்- நுண்ணறிவு, விவேகம்
வெஃகும்- விரும்பும்
படி- பூமி

[இன்று நல்லூர் முருகன் 4-ம் திருவிழா]

# இனப்பிரச்னைக்கு . . .

(3-ம் பக்கத் தொடர்ச்சி)
பாசனத்திற்காயினும், நில நீரை ஈடுசெய்து குளாய்க் கிணற்று நீர்பாசனத்திற்காயினும் எல்லாக் குளங்களையும் புனரமைத்தல் வேண்டும்.

1980 ல் யாழ் மாவட்டசபை செய்த பின்வரும் மதிப்பீடுகளிலிருந்து மொத்தச் செலவின் பருமனை ஓரளவு ஊகிக்கமுடியும். கரியாலை - நாகபடுவன் குளம், 12 000 ஏக்கர் அடி. ரூ 90 லட்சம், குடமுறிப்பு நீர்த்தேக்கம், 50 000 ஏக்கர் அடி ரூ 140 லட்சம்

வீதிகள், வீட்டுவசதி, பாடசாலை, மருத்துவ வசதிகள் மற்றும் அடிப்படை அமைப்பு அபிவிருத்தியும், குளம் திருத்தும் பொழுதிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும் வவனியா, மன்னார் மாவட்டங்களை ரூ 80 கோடி செலவில் ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மேம்படுத்த வெளிநாட்டு உதவி முகவர்கள் இரு வருடங்கட்கு முன், முன்வந்ததை இக்கட்டத்தில் ஞாபகத்திற்கு கொண்டுவரலாம். இவ்வுதவி முகவற்காக செயற்பாடுகளின் முன்னேற்றத்தைக் காலத்துக்குக் காலம் கணித்து அறிக்கை சமர்ப்பிக்க நிபுணத்துவ தாபனங்களிலிருந்து திட்டமிடல் அமைச்சு சமர்பனங்களும் கோரியிருந்தது.

## பால்பண்ணை அபிவிருத்தி

விவசாயத்தில் குடும்பங்கட்கும் பொதுவாக முழுநேர அளவிற் செயற்பாடுகளில்லையென்பதாலும், பிழைப்பூதிய மட்டத்திலிருந்து இவர்கள் பொருளாதாரத்தை மேம்படுத்தவும், பாற்பண்ணை உற்பத்தியும் மேம்படுத்தலும் அத்தியாவசியமாகிறது.

1980 ல் யாழ் மாவட்ட சபை, நவீன விந்துபதனிடல் நிலையத்திற்கு ரூ 78 50 000மும் பயிற்சி நிலையத்திற்கு ரூ 22,50,000 மும் மதிப்பிட்டதோடு, முலைப்பான சேகரித்தல் விநியோக அமைப்பு, மிருக வைத்திய வசதி மேம்பாடு ஆகியவற்றின் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டியுள்ளது. இவை வடக்கு - கிழக்கு மாகாணங்களின் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தேவை

## தொழில்நுட்ப அபிவிருத்தி

மேற்குறிப்பிட்ட அடிப்படைத் தொழில்களின் துரித அபிவிருத்திக்கு தகுந்த தொழிற்திறனுடன் போதிய மனிதபலம் வேண்டும். ஆரம்பத்தில் முகாமை, தொழில்நுட்பத் திறன்களை குறுகிய காலத் திட்டங்களின்கீழ் ஏற்கனவே விடுதலைப் போராட்டத்தில் தொழில்நுட்பங்களைக் கிரகிப்பதிலும் இலட்சியத்திற்குத் தம்மை அர்ப்பணஞ் செய்வதிலும் தம்மாற்றலை நிரூபித்தவர்கட்கு பயிற்றுவிக்கலாம் இந்தமுகாமை தொழில்நுட்ப நிறுவனங்கள் இரண்டாமாண்டு தொடக்கம், உயர்மட்ட முகாமைத்துவ, தொழில் நுட்பநிறுவனங்களாக வளர்ந்து, சகல துறையறிவையும் நுட்பத்தையும் தம்முள் அடக்கி மேற்குறிப்பிட்ட அபிவிருத்திக்கு மட்டுமன்றி இவற்றிலிருப்து வளரும் இணைப்புத் தொழில் வளர்ச்சிக்கும் எதிர்காலத்தில் வளருந் தொழிற்சாலைகட்கும் தேவையான திறன்களை வழங்கவேண்டும்.

மற்றும்:- பிற தொழில்கள் தொழிற்சாலைகள், சேவைகளை வழமையான வியாபார ரீதியிலான தாராள வங்கியுதவிகளுடனும், பிற உதவிகளுடனும், தனியார்துறை கையாளுமென்பதை எனது அடிப்படைக் கொள்கையாக எடுத்துள்ளேன் இன்னும் பொதுச்சேவைகளும் வசதிகளும் மேம்பட்ட மட்டத்தில் வழங்கப்படுமெனவும் எதிர்பார்க்கிறேன்.

பொருளாதாரத் தீர்வின் மையம் யாதெனில், தொழில் தேடுவோர் சம்பள உத்தியோகம் வழங்கும் அரசாங்கத் துறையிலும் பார்க்க மீன்பிடி விவசாயம், தொழிற்சாலைத் துறைகளை நாடவிருப்பம் ஏற்படவேண்டும்.

## சம்பந்தப்பட்ட செலவினங்கள்

மேற்குறிப்பிட்ட புணருத்தாரன அபிவிருத்திச் செற்பாடுகட்குரிய செலவினங்களை மதிப்பீடு செய்யும் ஆற்றல்எனக்கில்லை. எனது போதாமைகளை நன்கு உணர்ந்த போதிலும் துணிகின்றேன்.

## புணருத்தாரணம்

நட்டயீடு வழங்கல், உயிரிழப்புகள், அழிவுகள், மற்றும் நட்டங்களை ஈடுசெய்து, வட கிழக்கு மக்களை இனப்பிரச்னை நெருக்கடிக்கு முன்னைய நிலைக்குமீட்டல்:-

| | | |
|---|---|---|
| மீன்பிடி சமூகம் | 340,000 | இலட்சம் |
| விவசாய சமூகம் | 40,000 | ,, |
| தொழில், வியாபாரம் மற்றும் தனியார் துறை | 60,000 | ,, |
| | 440,000 | ,, |

## அபிவிருத்தி

### மீன்வளம்

| | | |
|---|---|---|
| மீன்பிடித் துறைமுகங்கள்— மேலே குறிப்பிட்ட 15 | 10,000 | இலட்சம் |
| மறுஇடங்களில் நங்கூரமிடுதல், மற்றும் வசதிகள் | 1,000 | ,, |
| கரைக்கப்பால், ஆழ்கடல் மீன்பிடி வளங்களும் உபகரணங்களும் | 4000 | ,, |
| அடிப்படை வசதி அமைப்புகள் அபிவிருத்தி | 7,000 | ,, |
| | 22,000 | ,, |

### விவசாயம்:-

| | | |
|---|---|---|
| குளங்கள் புணருத்தாரணமும் மேம்படுத்துதலும் | ரூ 25,000 | இலட்சம் |
| ஆற்றுப்படுகைஅபிவிருத்தித்திட்டங்கள் கிழக்குமாகாணம் | 5,000 | ,, |
| அடிப்படைவசதி அமைப்புக்கள் அபிவிருத்தி | 25,000 | ,, |
| | 55,000 | ,, |

### பால்பண்ணை

| | | |
|---|---|---|
| விந்து பதனிடல்நிலையங்கள்—8 | 1,000 | இலட்சம் |
| பயிர்சி நிலையங்கள் —8 | 500 | ,, |
| நல்லினமாடுகள் இறக்குமதி | 1,000 | ,, |
| அடிப்படை வசதி அமைப்புகள் அபிவிருத்தி | 500 | ,, |
| | 3,000 | ,, |

| | | |
|---|---|---|
| முகாமை, தொழில்நுட்பநிறுவனம் | 5,000 | இலட்சம் |
| மொத்தம் | 2,52000 | இலட்சம் |

மொத்தச் செலவினம் குறைவாகத் தெரிகிறது. எனது போதாமைகளைச் சுட்டிக்காட்டுகின்றது போலும். நாட்டின் 1986ன் நிதித் திட்ட ஒதுக்கீடுகளைப் பார்க்கும்போது இக்குறைவு டளிச்சிடுகிறது:-

| | | |
|---|---|---|
| பாதுகாப்பு | ரூ. 57,910 | இலட்சம் |
| மூலதனச் செலவு | 301,250 | ,, |

இன்னும் அண்மையில் வெளியான ஒரு புதினக்குறிப்பையும் ஒப்பு நோக்கல் நல்லது. இது பின்வருமாறு உதவிக் கூட்டுக் [Aid Consortium] கூட்டத்தில் சிறீலங்கா பெற்றுக்கொண்ட ரூ 196,500 இலட்ச சலுகை உதவியை விட, நிதி திட்டமிடல் அமைச்சர் ரொனி டிமெல், சர்வதேச நாணய நிதியிடம் கொடுப்பனவுமீதிக்குதவ மேலும் ரூ65,000 இலட்சம்பெற ஏற்பாடு செய்கிறார். [ஆ]

## 'மாங்குளம வர்த்தகர் சங்கம்'

யாழ்ப்பாணம், புதன்
மாங்குளம் நகரத்திலுள்ள வர்த்தகர்கள், 'மாங்குளம் வர்த்தகர் சங்கம்' என்ற ஒரு அமைப்பினை உருவாக்கியுள்ளனர்.

இதன் நிர்வாகிகள் விபரம் வருமாறு:-

தலைவர்: கா. பூபாலசிங்கம், உப-தலைவர்: நா. சுப்பிரமணியம், செயலாளர்: ஏ குணரத்தினம், உப-செயலாளர்: ஏ. கிருஷ்ணபிள்ளை, பொருளாளர்: எம். குணரத்தினம். 9 பேர் கொண்ட நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பெற்றனர். [ச]

## நீர்ப்பாசன பணிமனை இடமாற்றம்

கிளிநொச்சி, செவ்.
கிளிநொச்சி இராணுவ - பொலிஸ் கூட்டுமுகாம்வளவில் இயங்கிவந்த பிராந்திய நீர்ப்பாசனப் பணிப்பாளர் பணிமனை நேற்று முதல் பளையில் இயங்க ஆரம்பித்துள்ளது.

பளை அலுவலகத்திலிருந்தே நேற்று முதல் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான பிராந்திய நீர்ப்பாசன வேலைகள் மேற்கொள்ளப்படுகிறது.

அலுவலகம் ஆரம்ப தினத்தன்று கணிசமானளவு ஊழியர்களும், நீர்ப்பாசன அதிகாரிகளும் வருகை தந்திருந்தனர்.


புனித இயக்கங்களுக்கு

ஒரு

பணிவான வேண்டுகோள்

எமது ஜீவனத்திற்கு உறுதுணையாயிருந்த ஈ எல். எப். 250 பெயரையுடைய 28 ஸ்ரீ 6758 (ஜி. எம். எஸ்.) இலக்கம் கொண்ட வாகனம் கடந்த 9-8-86 இரவு எமது வீட்டில் வைத்து இனந்தெரியாத ஆயுதபாணிகளால் கடத்தப்பட்டுவிட்டது. இதனை மீட்டுத்தந்துதவுமாறு புனித இயக்கங்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

து. பாலச்சந்திரன்.


நவாலி றோட்,
ஆனைக்கோட்டை. (C 4047)



எமது
இன்றைய புதிய வெளியீடுகள்
CHUCK NORIS நடித்த
மாபெரும் புதிய வெளியீடு
"DELTA FORCE"
"ELIMINATORS"
முதல் வசந்தம் (Liberty Original)
அலிபாபாவும் 40 திருடர்களும்
(தரமான பிரதி)
தென்னலி ராமன் (Original)
எமது அடுத்த வெளியீடு
அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்த
விஜய்காந்தின்
ஊமை விழிகள்
வீடியோ பிரசாத்
இல. 424, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(A 1046)



31-ம் நாள நினைவஞ்சலி



செல்வன்
கதிரவேலு
ரவிகாந்தன் (ராசன்)
மாணவன்
[வீரசிங்கம்
மகாவித்தியாலயம்]
மலர்வு: 18-05-1970
உதிர்வு: 14 07-1986

அன்புமகனே! ஆசைத்தம்பியே! பிள்ளைகளைப் பெற்றே ! பெருநிதியமென வளர்த்தோமே ராசா ரவிகாந்தன் எனும் நாமம் அனைத்துலகும் கேட்குமெனக் கனவுகள் பல கண்டோம். அக் கனவெல்லாம் வீணாகப் போய் விட்டதே ஐயா! பெற்று வளர்த்தவர் முதல் படித்துப் பழகியவர் வரை ரவிகாந்தன் எங்கேயென்று ஏங்கித் துடிக்கிறார்கள். அதைக் கேட்கும் போதெல்லாம் உச்சிவெடித்து உடல் சுக்கு நூறுகுதடா. ராசா! பூவாய் உதிர்ந்தாலும்பொறுத்திருப்போம் என்மகனே பிஞ்சாகி காயாகி கனிகின்ற பருவத்தில் கவர்ந்தானே காலன் உன்னை. எங்கள் உயிர் உள்ளவரை என்றென்றும் உனைமறவோம்.

உன்பிரிவால் துயருறும்: அப்பா, அம்மா, சகோதரர்கள், பெரியப்பா, பெரியம்மா, அன்ரிமார், சித்தப்பாமார், மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

மீசாலை, வடக்கு,
மீசாலை. (C 4045)



லிடோ
காலை 10-30, 2-30, 6-30
Dragon Lee-Aa Golden Dragon
Johnnie Chan- As Silver Snake
in
GOLDEN DRAGON
SILVER SNAKE
(Karate, Action, Thrills and Color)
Showing first time in Jaffna

கடைசி வாரம்
வெலிங்டன்
வெண்திரையில்
10-30, 2-30, 6-30
இனிய பாடல்கள் அதி பயங்கர சண்டைகள், தந்திர காட்சிகள், நகைச்சுவை நிறைந்த
சிவாஜி, ஜமுனா
வீரப்பா, நம்பியார்
தங்கமலை ரகசியம்
[புத்தம் புதிய பிரதி]
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டது.

## உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சைகள் இம்முறை யாழ். நகரில் நடைபெறும்

யாழ்ப்பாணம், புதன்

உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான தெரிவுப் பரீட்சை இம்முறை யாழ். நகரில் நடைபெறவிருக்கின்றது.

இலங்கை உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினால் வருடாந்தம் கொழும்பில் நடாத்தப்படும் இப்பரீட்சையை, இம்முறை யாழ். நகரில் நடாத்தும்படி, யாழ்ப்பாண உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் கேட்டுக் கொண்டதற்கு இணங்கவே, மேற்படி பரீட்சையை யாழ். நகரில் நடாத்துவதற்கு இலங்கை உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் அனுமதி அளித்துள்ளது.

இப்பரீட்சை மிகவிரைவில், யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ். நகரில் நடைபெறவுள்ளதாக, மேற்படி சங்கத்தின் தலைவர் திரு. ஈ. கே. குமரையா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இப்பரீட்சை, முற்றிலும் தமிழிலேயே நடாத்தப்படுமெனவும் 1-ம், 2-ம் 3-ம் தரங்களுக்கான பரீட்சைகள் அனைத்தையும் ஒரே நாளில் நடாத்துவதற்காக ஏற்பாடுகள் தற்போது செய்யப்பட்டு வருவதாகவும், இப்பரீட்சைக்கு தோற்ற விரும்பும் பரீட்சாத்திகள் எமது சங்கத்தின் காரியதரிசி திரு. ஏ தேவராசா 5/1, 1-ம் ஒழுங்கை, ஈச்சமோட்டை வீதி, சுண்டுக்குளி யாழ்ப்பாணம், என்னும் முகவரியுடன் தொடர்பு கொண்டு அதற்கான விண்ணப்பப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

இப்பரீட்சையை நடாத்துவதற்கு முன்பு, தாம் பல விரிவுரை வகுப்புக்களை நடாத்த விருப்பதாகவும், திரு. குமரையா தெரிவித்தார். (வி)

## சட்டவிரோத மின்இணைப்பு துண்டிப்பு

வட்டுக்கோட்டை, செவ்.

வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம் உப அபிவிருத்திசபை எல்லைக்குள் சட்டவிரோத மின் இணைப்பைப் பெற்றவர்களது இணைப்புகள் அகற்றப்பட்டுள்ளன.

சட்டவிரோத மின்இணைப்பின் மூலம் அப்பகுதி மின்மாற்றி செயலிழக்கும் நிலையில் இருந்ததால் மின் அத்தியட்சகர் திரு ஜெ. இராசக்கோன் இளைஞர் முன்னேற்றக் குழுவின் உதவியுடன் மேற்படி இணைப்புகளை அகற்றினர்.

வட்டுக்கோட்டையில் பல பகுதிகளிலுமிருந்து அகற்றப்பட்ட வயர்கள் பொதுமக்கள் முன்னிலையில் தீயிடப்பட்டன. [சி]

## முதலாண்டு நினைவஞ்சலி



**ஆறுமுகம் புவனேஸ்வரி**

தோற்றம்: 05-10-1957

ஆள்பவன் அழிப்பு: 13-08-1985

13-8-85 அன்று கொழும்பிலிருந்து வரும்பொழுது ஊர்காவல் படையினரால், திருகோணமலை ஆரும் கட்டையில் வைத்து துடிதுடிக்க வெட்டிக் கொலை செய்யப்பட்ட எமது அருமைத் தாயே! நீங்கள் இல்லா வாழ்வின் துயர் நினைந்து உருகி கண்ணீர் வடிக்கின்றோம் உங்கள் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம், நீங்கள் இல்லாது வாடும் அன்புக் கணவன் ஆறுமுகம்,
பிள்ளைகள்: தனராஜா, தனுராஜா, ஜெயக்குமார், ராதிகா, வசந்தா.
ஆதிகோவிலடி,
வல்வெட்டித்துறை.

C 4033

## ஓய்வூதியம்

யாழ்ப்பாணம், புதன்

"யாழ் தபால் நிலயத்திலும் யாழ் நகர எல்லையிலுள்ள தபால் நிலையங்கள் மூலமும் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு எதிர்வரும் 20ம் திகதி புதன் கிழமை ஓய்வூதியம் வழங்கப்படும்".

இவ்வாறு யாழ் தபால்அத்தியட்சகர் காரியாலயத்தில் இருந்து தெரிவிக்கப்படுகிறது.

அல்லைப்பிட்டி, ஆனைக்கோட்டை, சண்டிலிப்பாய், வாதரவத்தை, பிடாரி கோயில் தபால் நிலையம் முதலியவற்றில் ஓய்வூதியம் பெறுபவர்கட்கும் 20ந் திகதி ஓய்வூதியம் பெறத் தவறியவர்கட்கும் 28ம் திகதி வியாழக் கிழமை ஓய்வூதியம் வழங்கப்படும்.

ஓய்வூதியம் யாவும் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் வைத்து வழமை போல வழங்கப்படும். [ச]

## 350 கிறாம் எடைக்கு மேல் பார்சல்கள் ஏற்க மறுப்பு

சுண்டுக்குளி, செவ்வாய்

சுண்டுக்குளி தபால் அலுவலகத்தில் 350 கிறாமுக்கு மேற்பட்ட நிறையுடைய பார்சல்கள் ஏற்கப்பட மாட்டாதென கூறி அங்கு கொண்டு செல்லப்படும் பார்சல்கள் அங்குள்ள ஊழியர்களினால்திருப்பி விடப்படுகின்றன.

இதனால் கச்சேரி மற்றும் அரச திணைக்களங்களுக்கான தஸ்தாவேஜுகள் கடவுச் சீட்டு விண்ணப்பங்கள் தேசிய அடையாளஅட்டை விண்ணப்பங்கள் முதலியவை கொழும்புக்கு அனுப்புவதில் பெரும் தடங்கல்கள் ஏற்பட்டுள்ளதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது.

இது விடயமாக யாழ் கடவுச் சீட்டுக்கிளை ஊழியர்கள் யாழ் பிராந்திய பதில் அத்தியட்சருடன் நேரில்தொடர்பு கொண்டு வினவியபோது அவர் அதிக நிறையுடைய பார்சல்கள் இத் தபாலகங்களில் ஏற்கமுடியாதெனக் கூறி இப்படியான பார்சல்களை யாழ் நகரிலுள்ள குறிப்பிட்ட ஒரு தபாலகத்தில் ஒப்படைக்குமாறும் கூறியுள்ளா ராம்.

துப்பாக்கிமுனையில்—

# குழந்தையை பணயம்வைத்து நள்ளிரவில் பெருங்கொள்ளை

யாழ்ப்பாணம், புதன்

பச்சிளம் குழந்தையை துப்பாக்கி முனையில் பணயம் வைத்து ஒருலட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட நகைகளும் ரொக்கப் பணமும் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 11 30 மணியளவில் மல்லாகம் ஐயனார் கோவிலுக்கண்மையில் உள்ள ஓய்வுபெற்ற உத்தியோகத்தரான த. சண்முகநாதன் (57 வயது) என்பவரின் வீட்டில் இப்பயங்கர கொள்ளைச் சம்பம் இடம்பெற்றது.

3 மோட்டார் சைக்கிளில் வந்த 6 இனந்தெரியாதநபர்களே இக்கொள்ளைச் சம்பவத்திலீடுபட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

சண்முகநாதன் ஒரு அறையிலும் அவரது மகளும் மருமகனும் 9 மாதக் குழந்தையும் மற்றொரு அறையிலும் படுத்திருந்தினர்.

இக்குடும்பம் படுத்திருந்த அறைக் கதவைத் தட்டி, கதவைத் திறக்கச் செய்த கொள்ளையர்கள் துப்பாக்கி முனையில் பயமுறுத்தினர். தமதுகழுத்தருகில் கூர்மையான கத்தி ஒன்றை வைத்துப் படுக்க வைத்தனர்.

மருமகனை த. சிவகுமாரன் (32 வயது) என்பவரைத் துப்பாக்கியால் தாக்கி எங்கே நகை பணம் வைத்திருப்பதாகக் கேட்டு பயமுறுத்தினார்கள் அவர்களெதுவும்பேசாமலிருக்கவே 9 மாதக் குழந்தையை கட்டிலிலிருந்து வெளியில் தூக்கிவந்து நிலத்தில்கிடத்தி விட்டு துப்பாக்கியால் சுடப்போவதாக மிரட்டினார்கள்.

இப் பயமுறுத்தலைக் கண்டு பொறுக்கமுடியாத அக் குடும்பத்தினர் அலுமாரித் திறப்பைகொடுத்ததும் அலுமாரியை அவர்கள் திறந்து தாலிக்கொடி உட்பட சுமார் 32 பவுண் நகைகளையும் 12 ஆயிரம் ரூபா ரொக்கப் பணம் 3 கைக்கடிகாரங்கள், சிகரெட் லைட்டர் மின்சார இஸ்த்திரிகைப்பெட்டி ஆகியவற்றையும் எடுத்துக்கொண்டு மோட்டார் சைக்கிளில் ஏறிச் சென்றனர் என்றுதெரிவிக்கப்பட்டது.

## 3 முஸ்லிம்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கோஷ்டி ஒன்றே நேற்று அதிகாலை முஸ்லிம் கிராமத்துக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## உடல்-உள ரீதியாக...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாம் எந்தவொரு பிரச்னையையும் அறிவுரீதியாக அணுகி ஆராய்தலே சரியான நடைமுறையாகும். யாழ் பல்கலைக் கழகத்தினுள் ராகிங் பாரதூரமாக இடம்பெறுவதாகக் கருதிக் கொள்ளும் குறிப்பிட்ட ஓர் இயக்கத்தினர் இப் பிரச்னையை எப்படிக் கையாண்டிருக்க வேண்டும் கருத்துச் சுதந்திரத்திற்கு மதிப்பளிப்பவர்களாக இவர்கள் இருந்திருப்பின் இப்பிரச்னையை பலாத்கார அச்சுறுத்தல் மூலம் தீர்த்து வைக்கமுற்பட்டிருக்க மாட்டார்கள் அத்துடன் யாழ் பல்கலைக் கழகத்தை நிர்வகிக்கவென ஓர் நிர்வாகம் இருக்கிறது மாணவர்களின் பிரச்னையைக் கையாளவென மாணவர் அமைப்பு இருக்கின்றது. இத்தகைய அமைப்புக்களின் ஊடாக மாணவர்களை அணுகி இந்த ராகிங் சம்பந்தமாக தெளிவுபடுத்தி அவர்களை கருத்துரீதியாக வளர்த்தெடுத்து உளரீதியாக உடன்பட வைப்பதன் மூலமே இந்தப ராகிங் பிரச்னைக்கு தீர்க்கமாகவும் தீர்மானகரமான துமானதீர்வுக்குமுன் நின்று உழைத்திருக்கமுடியும் அதைவிடுத்து உண்மைக்குப் புறம்பாக 'ராகிங்' அளவு கடந்து இடம்பெறுகிறது எனக் குறிப்பிட்ட மேற்குறிப்பிட்ட இவ்வியக்கத்தினர் பொதுமக்கள் மத்தியில் பல்கலைக்கழக மாணவர்களை துட்டர்கள் எனவும் காமவெறியர்கள் எனவும் பிரசாரப்படுத்தும் கபட நாடகத்தின் மர்மம்தான் என்ன?

இதன் அடிப்படையிலேயே 'ராகிங்' தொடர்பாக மாணவர்களின் அனைத்துப் பிரச்னைகளையும்தீரவிசாரித்துஉண்மை நிலையை தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்புடைய நிர்வாகத்திடம் எட்டு அம்ச கோரிக்கைகளை முன்வைத்து கடந்த (7-8-86) அன்றுதொடக்கம் மாணவர்களினால் பகிஷ்கரிப்பு மறியல் போராட்டம் என்பன தொடர்ச்சியாகமேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்தகைய நிலையில் எமது ஜனநாயக தன்மை மிக்க நியாயமான கோரிக்கைகளுக்கான போராட்டத்தை தொடர்ந்து மேற்கொண்டிருக்கிறோம் இதனடிப்படையில் நிர்வாகத்திடம் எமமால் இறுதியாக பின்வரும் கோரிக்கைகள் கோரப்பட்டுள்ளன:

மறுமலர்ச்சிக்கழகம் உட்பட பல்கலைக்கழகத்தினது. எல்லா அமைப்புக்களின் நிர்வாகமும் ஜனநாயக முறைப்படி மாணவர் மத்தியிலிருந்து மாணவர்களால் தெரிவு செய்யப்பட வேண்டும் (நிர்வாகம்தவிர்ந்த) பல்கலைக்கழக மாணவர் தொடர்பான எந்த ஒரு பிரச்சினையும் பல்கலைக்கழகத்தை நிர்வகிக்கின்ற நிர்வாகத்திறனூடாகவும் மாணவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மாணவர் அமைப்பினூடாகவும் அணுகப்பட வேண்டும். இந்த வகையில் பல்கலைக் கழக தனித்துவம் பேணப்பட வேண்டும்

பல்கலைக் கழக நிர்வாகமானது சகல மாணவர்களுக்கான பாதுகாப்பு உத்தரவாதத்தை வழங்குவதுடன் பல்கலைக்கழக மாணவர் விடயங்களில் வெளியார் தலையீடு ஏற்படாத வகையில் பாதுகாப்போம் என நிர்வாகம் உத்தரவாதமளிக்கப்படவேண்டும்

7-8-86 அன்று பத்திரிகையில் 'ராகிங்' சம்பந்தமான அறிக்கைக்கு மறுப்பறிக்கை விடவேண்டும். அத்துடன் 12-8-86 பத்திரிகையில் வெளிவந்த பருத்தித்துறை பிரஜைகள் குழுவினர் மாணவர் போராட்டம் சம்பந்தமான தவறான அறிக்கைக்கு மாறாக உண்மை நிலை நிர்வாகத்தால் விடப்படவேண்டும்.

பல்கலைக்கழக அறிமுக அட்டை மூலம் தான் மாணவர்கள் அனுமதிக்கப்பட வேண்டும் பிரத்தியேக தேவைகளுக்கு நிர்வாகத்தின் அனுமதயுடன் உட்பிரவேசிக்கலாம்

அனைத்து மாணவர்களும் மனோநிலை ரீதியாக பாதிககப்பட்டிருப்பதால் கலைப்பீட பரீட்சைகள் யாவும் பிற்போடப்படவேண்டும். அத்துடன் விஞ்ஞான பீடா நடைபெறாத விரிவுரைகளும், செய்முறைகளும் செய்முறைப் பரீட்சைகளும் நடாத்தப்பட்டு பின் பரீட்சைக்கு தயார் படுத்தலுக்கான காலஇடைவெளி விடப்பட வேண்டும்.

நிர்வாகம் நடாத்தும் 'ராகிங்' சம்பந்தமான விசாரணைக் குழுவில் இன்று புதிதாக தெரிவு செய்யப்பட்ட புதிய மாணவர் அமைப்புக் குழுவின் பிரதி நிதிகள் இருவர் பங்கு பற்ற வேண்டும்.

## மூதூரில்---

(1-ம பக்கத் தொடர்ச்சி)

சன்ஸ் ஸ்தலத்திலேயே பலியானார். அருகே இருந்த திருமதி யோண்சன்ஸ்சுக்கு காலில் காயமேற்பட்டது.

கொலைசெய்யப்பட்ட கணவனின் சடலத்தை பொலிசார் உதவியுடன் திருமதி யோண்சன்ஸ் எடுத்துச்சென்றார்.

திருமலை பதில் நீதவான் திரு சந்திரபாலன் மரண விசாரணையை மேற்கொண்டார் கொலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

சடலம் டென்மார்க்கொண்டு செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. [ச]

## செல்வா

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கொண்டிருந்த கு. உதயகுமார் (25 வயது) என்ற இளைஞரே துப்பாக்கிற் குண்டுக்குப்பலியானவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவரது சடலம் எடுத்துவரப்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது.

இவ்விளைஞர்சித்தசுவாதீனம் அற்றவர் என நம்பப்படுகிறது.

## கூட்டணி---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கொழும்பு வரும் இக்குழுவில் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கம், தலைவர் திரு மு. சிவசிதம்பரம் உட்பட பொலிட் பீரோ உறுப்பினர் ஆர். சம்பந்தன், வெ. யோகேஸ்வரன், வீ ஆனந்த சங்கரி ஆகியோருடன் சென்னை ச் சேர்ந்த இரண்டு அல்லது மூன்று பேரும் அடங்குவர் எனத் தெரியவருகிறது (ஓ)

## கல்முனை---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாக்கி முஸ்லிம் - தமிழர் கலவரமாக மாற்றியுள்ளனர்.

பிற்போக்கு முதலாளித்துவ ஆளும் வர்க்கம் தங்களது பிரதான ஆயுதமாகஇனரீதியான கருவியாகப் பாவிப்பார்கள். ஆகவே மதப்பூசல்களை சாட்டாக வைத்துக் கொண்டு அடுத்த சமூகத்தவரைத்தாக்குவது கொல்லுவது இனி மேலாவது நடைபெறக்கூடாது.

## விஞ்ஞான பீட

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வருட விஞ்ஞான மாணவர்கள என்ற பெயரில் வெளியான துண்டுபிரசுரம் குறித்து பல்வேறு சந்தேகங்கள் மாணவர்கள் மத்தியில் எழுந்துள்ளன.

''யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கும் குறிப்பிட்ட ஓர் விடுதலை இயக்கத்திற்குமிடையே மோதலை உருவாக்க திரைமறைவில் நின்று செயற்படும் சில தீயசக்திகளின் தூண்டுகோலின் விளைவுதான் அத்துண்டுப்பிரசுரமா? அல்லது அண்மைக் காலங்களில் ஹெலிகாப்டரிலிருந்து வீசப்படும் துண்டுப்பிரசுரங்களும் மேற்குறிப்பிட்ட துண்டுப் பிரசுரத்துக்குமிடையே அதிகளவு வேறுபாடடைக் காணமுடியாமல் இருப்பதால் இதுவும் அத்தகைய ஓர் துண்டுப்பிரசுரமா?

தீயசக்திகளின் வலையில் சிக்காது சுயமாகவும் நிதானத்துடனும் இருப்போம்''

## தெற்காசிய பிராந்திய— வானொலி நிலையம்

# புதுடில்லியில் அமையும்

### ‘சார்க்’ அமைப்பு தீர்மானம்

டாக்கா, ஆக. 12

தெற்காசியப் பிராந்திய கூட்டுறவு அமைப்பைச் சேர்ந்த (சார்க்) ஏழு நாடுகளின் இரண்டு நாள் கூட்டம் இன்று (செவ்வாய்க் கிழமை) டாக்காவில் ஆரம்பமானது.

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை, பூட்டான், நேபாளம் ஆகிய நாடுகளின் உறுப்பினர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொள்வார்கள்.

பங்களாதேஷ் அதிபர் எர்ஷாத் கூட்டத்தை ஆரம்பித்து வைப்பார்.

கடந்த டிசம்பர் மாதம் ‘சார்க்’ முறைப்படி ஆரம்பித்து வைக்கப்பட்டது முதல் இந்த அமைப்பின் உறுப்பினர்கள் சந்தித்துப் பேசுவது இதுவே முதல் தடவையாகும்.

இக்கூட்டத்தில் வெளியுறவு செயலர்கள் நிலையிலான நிரந்தரக்குழு மற்றும் அதிகாரிகள் நிலை அலுவல்கள் குழுவின் அறிக்கைகள் என்பன பரிசீலிக்கப்படும்.

நவம்பர் மாதத்திகு தெற்காசிய பிராந்திய கூட்டுறவுச் சங்க உச்சி மகாநாடு பங்களூரில் நடைபெறும்போது அந்த சங்கத்தின் தலைமைச் செயலர் நியமனம் குறித்து முடிவெடுக்கப்படும்.

இதேவேளை மகளிர் மற்றும் அபிவிருத்தி குறித்த நுட்பக் குழுவின் தலைமை நாடாக இந்தியா செயல்பட நிரந்தரக் குழு இணங்கியுள்ளது.

இத்துடன் புதுடில்லியில் தெற்காசியப் பிராந்திய வானொலி நிலையத்தையும், டாக்காவில் பிராந்திய விவசாய தகவல் நிலையத்தை அமைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. [எ]

உலகச் செய்திகள்

### விபத்துக்குள்ளான இந்திய விமானத்தின் சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டன

புதுடில்லி, ஆகஸ்ட் 12

விபத்துக்குள்ளாகி விழுந்து நொருங்கிய ஏ என். 32 ரக இந்திய விமானப்படை விமானமொன்றின் சிதைவுகள் ஜம்மு காஷ்மீரின் ‘தோடா’ மாவட்டத்தில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

இந்த ஆண்டு மார்ச் மாதம் 22-ம் திகதி ‘கட்டான் கோட்டி’லிருந்து லத்தார்க் நோக்கிச் சென்றுகொண்டிருந்த இந்த விமானம் புயலில் சிக்கி விழுந்து நொருங்கியதில் 19 பேர் இறந்தனர்.

ஜம்மு காஷ்மீர்-ஹிமாசலப் பிரதேச எல்லைக்கருகில் கடல் மட்டத்துக்கு சுமார் 14,500 அடி உயரத்திலுள்ள மலையில் அடர்த்தியான உறைபனிக்கு அடியில் இந்த விமானம் புதையுண்டிருந்தது.

இந்தச் சிதைவுகளை விமானப்படை ஹெலி கொப்டர் ஒன்று விபத்து நேரிட்ட இடத்திலிருந்து மீட்டபோது அதில் 16 சடலங்கள் இருக்கக் காணப்பட்டன. [சி]

### கனடா மீன்பிடி கப்பல் 150 பேரின் உயிரை காத்தது

லண்டன், ஆக 12

நியூபின்லாந்தின் கரைக்கு அப்பால் சுமார் 150 பேரை கனடா நாட்டின் மூன்று மீன்பிடிக் கப்பல்கள் காப்பாற்றியுள்ளன.

ஐந்து நாட்களாக இவர்கள் இரண்டு கட்டுமரங்களில் இருந்ததாகக் கூறப்படுகிறது.

இவர்களனைவரும் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது இதுவரை கண்டறியாத போதும் அநேகமாக இவர்கள் ஆசிய இனத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. [எ]

### அங்கோலாமீது தென்னாபிரிக்கா தாக்குதல்

அங்கோலா, ஆக 12

அங்கோலாவின் இரு முக்கிய நகரங்களை தென்னாபிரிக்க துருப்புக்கள் தாக்கியதாக அங்கோலா அரசு குற்றம்சாட்டியுள்ளது.

‘யூனிட்ரா’ கிளர்ச்சிக்காரர்களின் ஆதரவுடன் தென்னாபிரிக்கத் துருப்புக்கள் குண்டுகளால் அந்த இரு நகரத்தையும் தாக்கியதாகப் பாதுகாப்பு அமைச்சின் அறிக்கை மேலும் தெரிவிக்கிறது. [எ]

### றீகன் நம்பிக்கை

மாஸ்கோ, ஆக 12

‘‘மாஸ்கோவில் நடைபெறும் ஆயுதக் கட்டுப்பாட்டுப் பேச்சுக்கள் முன்னேற்றமடையும்’’ என்று அமெரிக்க ஜனாதிபதி திரு. றொனல்ட் றீகன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஆயுதக் கட்டுப்பாட்டில் சோவியத்தின் யோசனையை திரு. றீகன் வரவேற்றார். [எ]

பேராதனைப் பல்கலைக்கழக
வெளிவாரிப் பரீட்சை
B. A. 1986 டிசம்பர்
G. A. Q. 1987 ஏப்ரல்
மீட்டல் - வினு விடை வகுப்பு
பொருளியல்
S. வரதராஜன்
ஆரம்பம்: 16-8-86 சனி 2.00 p. m.
பொருளியல் கல்வி நிலையம்
200, பிரதான வீதி, சுண்டுக்குளி.
(C 4032) (சென். ஜோன்ஸ் கல்லூரி முன்பாக)

வாடிக்கையாளர்களே! வியாபாரிகளே!
இதோ:




உடலுக்கு ஊட்டமும், நாவுக்குச் சுவையும்,
மனதிற்குத் திருப்தியும், விலைக்கு மலிவும்
கொண்ட
இன் சுவையுடைய
“பனம் பழ ஜாம்”
* சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு விடப்பட்டுள்ளது
* உள்ளூர் உற்பத்தியை வேண்டிச் சுவைத்து மகிழ்ந்திடுவீர்
விற்பனை செய்யும் இடங்கள்:
1. கற்பகம் விற்பனை நிலையங்கள்
2. யாழ். ஐக்கிய வியாபாரச்சங்கக் கிளைகள்
“கற்பகம்”
பனை அபிவிருத்திச் சபை.
(A 1126)

பிரயாண ஒழுங்குகள்
* கனடா * ஜேர்மனி
* பிரான்ஸ் * கொலண்ட்
* பெல்ஜியம்
ஆகிய நாடுகளுக்கு பிரயாண
ஒழுங்குகளை மேற்கொள்ளவும்
மற்றும்
பாஸ்போட், பொன்ட் (BOND), விஸா, ரிக்கற்
ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.
உடன் தொடர்பு கொள்ளவும்.
INTERSUN GROUP,
சின்னத்தம்பி அவெனியு,
(மகளிர் கல்லூரி அருகாமை),
மானிப்பாய். (A-1029)

பிரயாண ஒழுங்குகள்
* டென்மார்க் * கனடா
நேரடிப் பிரயாணம் உடனுக்குடன் ஒழுங்கு
செய்து கொடுக்கப்படும்.
* சவூதி * குவைற்
* அபுதாபி
ஆகிய இடங்களில் வருமான வாய்ப்புகளுக்கான
ஒழுங்குகள் உடன் செய்து கொடுக்கப்படும்.
Passport, Bond
முதலியனவும் செய்துகொடுக்கப்படும்.
GROUP ATLANTIC
163, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
[அடைக்கலமாதா கோவிலுக்கு முன்பாக]
A 1035

## பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க் ★ கனடா

விரைவில் செல்ல விரும்புபவர்கள் எம்முடன் உடன் தொடர்புகொள்ளவும்.

அத்துடன்

★ ஜேர்மனி ★ சுவிஸ்
★ பிரான்ஸ் ★ இத்தாலி

ஆகிய நாடுகளுக்கு எமது பிரதிநிதி வெகுவிரைவில் அழைத்துச்செல்லவுள்ளார்.

மற்றும்

பாஸ்போர்ட், விசா, ரிக்கட், பொன்டிங் என்பனவும் வெகுவிரைவில் செய்து கொடுக்கப்படும்.

### லிப்ருஸ் லிமிற்ரெட்

R. G. பில்டிங்,
70, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

2nd Floor,
York Building,
94 1/7, York Street,
Colombo - 1;
Tele. No. 25508.

[A-1042]



தமிழ்மொழி மூலம்
ஆங்கிலம் பயில்வோருக்கு
அருமையான ஒரு வாய்ப்பு!
உங்கள் பயிற்சிக்கு மிக உதவியாக வந்துவிட்டது

## LEARNER'S ENGLISH

[லேணேர்ஸ் இங்கிலிஷ்]

143 பக்கங்கள் மட்டுமே கொண்ட இந்த நூலை ஆங்கிலம் தெரிந்த ஒருவரின் உதவியுடன் நீங்கள் கற்றுத் தேர்ந்தால் போதும் - ஆங்கிலமொழி உங்களிடம் வந்துவிடும்.

ஆங்கில மொழியில் பிழையின்றி எழுதவும், வாசிக்கவும், பேசவும் இந்நூலின் உதவியால் உங்களுக்கு நல்ல ஆற்றல் ஏற்படும். இந்நூலிலுள்ள விளக்கக் குறிப்புகள் யாவும் தமிழ்மொழியில் இருப்பதால் தமிழ் மாணவர்களுக்கு இது மிக வாய்ப்பானது.

— இதுபோன்ற நூல் இதுவரை வெளிவந்ததில்லை.

★ இது ஒரு வரதர் வெளியீடு.

விலை ரூபா 16/-

இப்பொழுது விற்பனையாகிறது!

நல்லூர் திருவிழா அமைப்பிலுள்ள
பூபாலசிங்கம் புத்தகசாலையிலும்
இந்நூலைப் பெற்றுக் கொள்ளலாம்.

(A- 1124)



## பிரயாண ஒழுங்குகள்

சவூதி-கிளீனேர்ஸ்
குவைத்-கிளீனேர்ஸ்
ஈராக்-ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ்

ஆகிய நாடுகளுக்கு வருமான ஒழுங்குகள் அத்துடன்
பாஸ்போட், பொன்ட், ரிக்கற்றிங் ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

### யூனிவேர்சல் ஏஜென்சி

125 (455), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

[ ஆயுர்வேதக்கல்லூரிக்கு அருகாமையில் பெற்ரோலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக ]

(A 1044)


## 2-வது ஆண்டு நினைவஞ்சலி



நாகராஜா
விக்னேஸ்வரன்
(விக்கி)

தமிழ்மண்ணில்,
21- 3- 1965

வீரசொர்க்கம்;
13- 8- 1984

எம் சகோதரனே!
நாட்டைக் காக்க
எண்ணி போராடச்
சென்ற நீ
கூலிப்படையினராம்
குண்டுக்கே இரையானாய்
பாரத்தை எம் நெஞ்சில்
தந்துவிட்டு
வீரத்தை துணைகொண்டு
சென்றாயோ வீரசொர்க்கம்
மண்மீட்கப் புறப்பட்டு
விண்ணேகி
சென்ற எங்கள் வீரச்
செல்வா
ஈழம் உள்ளவரை
அழியுமோ
உனது புகழ்.
உன்நெஞ்சில் வாழும்,
தாய், சகோதரர்கள்,
மச்சான்மார்,
நண்பர்கள்.

நவாலி, மானிப்பாய்.
(C 4043)


## COMPUTER PROGRAMMING

WEEKEND CLASSES

G. C. E. A/L பரீட்சைக்கு இம்முறை தோன்றிய மாணவர்களின் வசதிக்காக
விசேஷ வகுப்புகள்

ஆரம்பம்: 16-8-86 சனிக்கிழமை 8 மணிக்கு

We Never forget you have a Choice!

### CANTABIA INSTITUTE

21, MAIN STREET, JAFFNA.
T. PHONE: 24201.

[A-1045



## V. J. S. GROUP

வியாபாரிகளே!

உங்களுக்குத் தேவையான

★ COCA COLA
★ FANTA
★ PORTELLO & SPRITE

முதலியவற்றை மொத்தமாகப் பெற்றுக்கொள்ள உடன் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

113, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 24204

(C 4040)


## ரோந்து வதந்தியால் பரந்தனில் பரபரப்பு

யாழ்ப்பாணம புதன்

இராணுவத்தினர் ரோந்து வருகிறார்கள் என்ற வதந்தியால் பரந்தனில் நேற்றுக் காலை பெரும்பரபரப்பு ஏற்பட்டது.

வர்த்தக நிலையங்கள் யாவும் இழுத்துமூடப்பட்டன, சந்தையில் நின்றவர்கள் யாவரும் கால்போனபோக்கிலே ஓடத் தொடங்கினர். அரசகாரியாலயங்களில் இருந்தும் ஊழியர்கள் வெளியேறத்தொடங்கினார்கள் சில நிமிடங்களுக்குள் பரந்தன் நடமாட்டமெதுவுமின்றி வெறிச்சோடிக்காணப்பட்டது.

இந்தப் பரபரப்பு நேற்று பிற்பகல்வரை நீடித்தது.

[ஒ-ச]

## வீதி திருத்த வேலைகள்

யாழ்ப்பாணம், புதன்

யாழ். பருத்தித்துறை பிரதான வீதியில் திருத்த வேலைகள் நீர்வேலியில் நடைபெறுவதினால் நீர்வேலி பிரதான வீதியூடாகச் செல்லும் சகலவாகனங்களும் வேறு பாதையால் செல்கின்றன.

வீதி திருத்த வேலைகள் துரிதமாக நடைபெறுவதையிட்டு அப் பகுதி மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்கள். (க)

## யாருடையது?

யாழ். காங்கேசதுறைவீதியைச் சேர்ந்த திரு. என். பாலேந்திரன் என்பவர் ஒரு கைக்கடிகாரத்தையும், திரு ரி யோகராசா என்பவர் ஐந்து திறப்புக்கள்கொண்ட திறப்புக் கோர்வையையும் கண்டெடுத்து 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள்.

உரியவர்கள் தகுந்த அத்தாட்சி காட்டி அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

## உற்சவம்

யாழ்ப்பாணம், புதன்

வடலியடைப்பு ஸ்ரீ சித்தி விநாயகர் வருடாந்த உற்சவம் சடந்த 8ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

இம்மாதம் 18ம் திகதி ரதோற்சவமும், 19ம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். சிவஸ்ரீ நாராயணக் குருக்கள் உற்சவத்தை நடத்தி வருகிறார். [அ]

## முப்பொருள் உண்மை

யாழ்ப்பாணம், புதன்

இந்துநாகரிகம் கற்கும் மாணவர்களுக்குப் பயன்படும் ''முப்பொருள் உண்மை'' நூலின் இரண்டாம் பதிப்பு வெளியாகியுள்ளது. யாழ்ப்பாணத்திலுள்ள சகல புத்தகசாலைகளிலும் இந்நூல் கிடைக்கும். [ஆ]

## இன்றைய பலன்

மாதம்- ஆடி
திகதி- 28 [1986-08-13]
புதன்கிழமை
திதி: அட்டமி பி ப.வரை
நக்ஷத்திரம்: விசாகம்
மு இ. வரை

மேடம்: இதயம் எரிமலையாகும். எதிரிகள் தாக்குவர். ஏமாற்றத்துக்கும் இடமுண்டு. இன்று அதிக பேச்சினைத் தவிர்க்கவும்.

இடபம்: தாம்பத்தியவாழ்க்கையில் மகிழ்ச்சி காணப்படும். குடும்பத்தில் தென்றல் வீசும், இரவில் திருப்திகரமான நிலை தோன்றும்.

மிதுனம்: சூழ்ச்சி வலையின்னும். அடுத்துக் கெடுப்பதற்கு பகைவர்கள் பக்கத்திலே பதுங்குவர். சகோதரவழியாலும் சஞ்சலமுண்டு

கடகம்: இலட்சிய வாதிகளுக்கு இன்று சிறப்பான தினம், புண்ணிய விருப்புக்கும் இடமுண்டு, தந்தைவழித்தன வரவிற்கும் இடமுண்டு.

சிங்கம்: கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும், ஓவியர்கள் வாழ்க்கை ஒளிமயமாகும்,சிலருக்கு இடமாற்றமும் ஏற்படலாம்

கன்னி, சகோதரவழியால் நன்மை வந்துசேரும், மக்களால் மகிழ்சியுண்டு. புதுத் தொழில்முறைகளை மனம் நாடும்.

துலாம்: அவசரம் வேண்டாம். ஆயுதப்பீடைக்கு இடமுண்டு நின்று நிதானித்து செயலாற்றினால் நன்மையுண்டு.

விருச்சிகம்: சிறுவிடயத்தில் கூட அதிக ஆத்திரப்படுவீர்கள் வீணான சந்தேகங்களும் தோன்றலாம். எதையும் சிந்தித்தபின் செயலாற்றவும்.

தனுசு: பிறருக்குஉதவுவதில் முன்நிற்பீர்கள் தெய்வத்தின் அருள் தாராளமுண்டு. நண்பராலும் நன்மையுண்டு

மகரம்: தொடங்கிய விடயம் பாதியில் தடைப்படும், பொருள்விரயத்திற்கும், இடமுண்டு, உடனலக் குறைவு

கும்பம்:
தன்மான மிகுதிக்கும் தன வரவுக்கும் இடமுண்டு. சிலருக்கு வாகன சுகமுண்டு. கல்வியில் முன்னேற்ற முண்டு.

மீனம்: போதுமென்ற மனத்துடன் செயற்படுவீர்கள், பிறருக்கு உழைப்பதில் உவகை ஏற்படமுடியும், வீட்டிலும் நல்ல சூழ்நிலை நிலவும்.

திருமலை
வே. ரவீந்திரன்

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

புதன்கிழமை 13-8-86

வட அத்திலாந்திக்கில்

# நியூபவுண்லாந்து அருகே 150 தமிழ் அகதிகள் தத்தளிப்பு!

## கனேடிய அதிகாரிகள் காப்பாற்றினர்

(ஒட்டாவா)

கனடாவுக் கருகிலுள்ள நியூபவுண்லாந்து தீவுக் கடலில இரு உயிர்காப்புப் படகுகளில் தத் தளித்துக் கொண்டிருந்த பெண்கள், பிள்ளைகள் சுமார் 150 இலங்கை தமிழ் அகதிகளை, திங்கட்கிழமையன்று கனடிய அதிகாரிகள் காப்பாற்றியுள்ளதாக பி. பி ஸி அறிவித்துள்ளது. இவர்கள் இப்போது செஸ். ஜோண் நகருக்குக் கொண்டு செல்லப் பட்டுள்ளனர்.

4 பெண்கள், 5 குழந்தைகள் உட்பட 150க்கு மேற்பட்டோரை கொண்ட இக்குழு சுமார் ஒரு மாதகாலமாக கடலில் பயணம் செய்ததாகவும், கனடாவுக்கருகில் இவர்கள் பயணம் செய்த கப்பலில் இருந்து இவர்கள் பலாத்காரமாக இறக்கிவிடப்பட்டனர் எனவும் ஐந்து நாட்களாக கடலில் உணவின்றி கத்தளித்துக் கொண்டிருக்கையில் கனடிய அதிகாரிகளினால் காப்பாற்றப் பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் பயணம் செய்த கப்பல் இவர்களை இறக்கி விட்ட பின்னர் தனது பெயரை மாற்றிக் கொண்டு சென்றதாகவும் பி. பி. ஸி அறிவித்துள்ளது.

கனேடிய அதிகாரிகளினால் பராமரிக்கப்ப்பட்டுவரும் இந்த தமிழ் அகதிகள், என்ன நோக்கத்திற்காக பயணம் செல்தார்கள் என்ற விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (ஊ)

## இன்று

யாழ்ப்பாணம் புதன்

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் பொதுக்கூட்டம் இன்று காலை கைலாசபதி கலை அரங்கில் நடைபெறவுள்ளது.

## கலைவிழா

சாவகச்சேரி, செவ்வாய்

கைதடி தெற்கு அம்மன் கோவில் நிதிக்காக மாபெரும் கலை விழாவும் வீடியோ படப் பிடிப்பும் இம் மாதம் 23 ம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

## குறுக்கீடுகளின்றி நயினை உற்சவம் நடைபெறுகிறது

யாழ்ப்பாணம், புதன்

நயினை நாகபூஷணி அம்பாள் வருடாந்த உற்சவம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இச்சமயம் அங்குள்ள இராணுவம் முகாமைவிட்டு வெளியேறி குறிக்கீடுகள் எதிலும் ஈடுபடவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதே சமயம் போராளிகளும் ஆலய உற்சவத்துக்கு ஒத்துழைப்பாக நடக்கிறார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது நயினை உற்சவம் யாவும் முடிவுறும் வரை இராணுவத்தினர் முகாமிலிருந்து வெளி வர மாட்டார்கள் எனவும் நம்பப்படுகிறது.

நயினை அம்பாளைத் தரிசிக்க வெளியூர் பக்தர்கள் தினமும் கணிசமான அளவில் நயினை தீவு நோக்கிச் செல்கிறார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ச)

## கோப்ரல் பலி இருவர்காயம்

மூதூர், செவ்.

தம்பலகாமத்திலிருந்து சுமார் ஒன்றரை மைல் தொலைவிலுள்ள காட்டுப் பகுதி ஒன்றில் போராளிகளுக்கும்-இராணுவத்தினருக்குமிடையே நடந்த நேரடிமோதலில் இராணுவக் கோப்ரல் ஒருவர் இறந்தார் இரண்டு படைவீரர்க்குக்காயம் ஏற்பட்டது.

நேற்றுக்காலை 8 மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றது தம்பலகாமம் இராணுவ முகாமிலிருந்து புற பட்ட இராணுவத்தினர்க்கும் போராளிகளுக்குமிடையே ஏற்பட்ட இந்த மோதலில் கோப்ரல் எஸ். கே. ஏ. குமாரகே என்பவரே பலியானவராவார். (ச)

## முழுநேரத் தொண்டர்களுடன் தமிழீழ மாணவர் பேரவை அம்புலன்ஸ் சேவை!

யாழ்ப்பாணம், புதன்.

யாழ். நகரில் அசம்பாவிதங்கள் விபத்துக்கள் ஏற்படும் போது தமிழீழ மாணவர் பேரவையின் அம்புலன்ஸ் சேவை இலவசமாக கிடைப்பதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதாக அம்புலன்ஸ் சேவைப் பகுதிப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

இச் சேவையில் தற்பொழுது 15 முழு நேரத்தொண்டாகள சேவையில் ஈடுபட்டுள்ளார்கள்.

இச்சேவை தேவைப்படுவோர் யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியில் உள்ள மாணவர் தொடர்பகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தமிழீழ மாணவர் பேரவையினர் அறிவித்துள்ளனர்.

(வா)

## சரவணை பிரசைகள் குழு

ஊர்காவற்றுறை, செவ்

சரவணை பிரசைகள் குழுவின் வருடாந்தக் கூட்டம் தலைவர் திரு. க. நடராசா தலைமையில் நடைபெற்றது. நடப்பாண்டு தெரிவில் தலைவர் திரு சு. பழனிவேற்பிள்ளை உப தலைவர் திரு இ நகுலேச பிள்ளை, செயலாளர் திரு சு. சோமசேகரம், உப செயலாளர் திரு எம். செல்லையா, பொருளாளர் திரு கு. கணேசலிங்கம் ஆகியோருடன் 6 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யபபட்டனர்.

## புதிய சேமக்காலை!

யாழ்ப்பாணம், புதன்

கொட்டடியில் அமைந்துள்ள கிறிஸ்தவர்களுக்கான சேமக்காலை தற்போது பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதால் அவர்களுக்கான புதிய சேமக்காலை ஒன்று கொழும்புத்துறை இந்து மயானத்தின் வடக்குப்பக்கமாக வுளள காணியில் அமைக்கப் பட்டு வருகிறது.

பெண்டிக் கோஸ், மெதடிஸ் மிஷன் ஆகிய பிரிவினருக்காக இந்த சேமக்காலையில் தனித் தனியான இடங்கள் ஒதுக்கப் பட்டுள்ளன மிகுதக் காணி இந்து மயானமாகப் பாவிக்கப் படும்.

இவற்றுக்கான சகல துரித அபிவிருத்தி நடவடிக்கைகளையும் யாழ் மாநகர ஆணையாளர் திரு சி வீ கே. சிவஞானம் மேற்கொண்டுள்ளார் (சி)

## பொதுக்கூட்டம்

சாவகச்சேரி, செவ்வாய்

யாழ். மாவட்ட விசேட சேவை அலுவலர்கள் சங்கத்தின் பொதுக்கூட்டம் இம் மாதம் 30-ம் திகதி சனிக்கிழமை காலை 0 மணிக்கு சென். ஜோன்ஸ். கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்பொதுக்கூட்டத்தில் யழ். அரசாங்க அதிபர் திரு வீ. எம் பஞ்சலிங்கம் பிரதம விருந்தினராகப் பங்குகொள்ளவுள்ளார்.

## உணவு முத்திரை வேலைகள் துரிதம்

யாழ்ப்பாணம், செவ்

இம்மாதம் 31ந் திகதிக்கு முனபாக சகல இடங்களுக்கும் உணவு முத்திரை விநியோகம் செய்து முடிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் உள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உணவு முத்திரை விநியோகம் செய்வதற்கான வேலைகள் மிகவும்மும்முரமாக நடைபெறுகிறது.

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இம்முத்திரை விநியோகம் நடை பெற்றுக் கொண்டிருக்கிறது.

ஒவ்வோர் கூட்டுறவுச் சங்கக்கடைகளுக்கும், உத்தரவு பெற்ற வியாபாரக் கடைகளுக்கும் உணவு முத்திரை பதியப்படும் வேலைகள் முடிந்தவுடன் அவை உடனுக்குடன் வழங்கபடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## புலிகள் அறிக்கை

# ரோந்துப்படைமீது தாக்குதல்: பலர் பலி!

யாழ்ப்பாணம், புதன்.

திருமலை மாவட்டத்தில் ரோந்து சென்ற இராணுவத்தினர்மீது கடந்த இருநாட்களாக தொடர்ந்து விடுதலைப் புலிகள் அதிரடித்தாக்குதல் நடத்தினர்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற தாக்குதலில் 3 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் பலர் படுகாயமடைந்ததாகவும் லெப்டினட் சொர்ண பாலா என எழுதப்பட்ட தலைக்கவசமும் சில ஏ. கே. ரகரைபிள் ரவைக்கூடுகள் தம்மால் கைப்பற்றப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தம்பலகாமம் பகுதியில் இத்தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றது.

இத்தாக்குதல் சம்பவங்கள் குறித்து 'தமிழீழ விடுதலைப் புலிகள்' விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

''நேற்று முன்தினம் பி ப. 4 மணியளவில் 13-ம் கட்டை இராணுவ முகாமில் இருந்து சுமார் 100 இராணுவத்தினர் தம்பலகாமத்தினை சுற்றிவளைப்பதற்காக கால்நடையாக வந்து கொண்டிருந்த வேளை கோணேசர் கோயில் முன்பாக வைத்து எமது தரப்பினர் தாக்கியதில் 3 ராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர் பலர் படுகாயமடைந்தனர்.

'சம்பவம் நடந்த இடத்தில் 'லெப்ரினட் சொர்ணபாலா' என எழுதப்பட்ட தலைக்கவச மொன்றும் சில ஏ கே. றைபிள் ரவைக் கூடுகளும் எம்மால் கைப்பற்றப்பட்டன.

இறுதியில் ராணுவத்தினர் பின்வாங்கி முகாமை அடைந்தனர்.

### நேற்றுக்காலையில்

'மீண்டும் நேற்றுக் காலை 6 மணியளவில் தம்பலகாமத்தினை சுற்றிவளைப்பதற்காக நடைபவனியாக வந்த 200-க்கும் மேற்பட்ட ராணுவத்தினர் மீது எம்மவர்கள் சரமாரியாக தாக்குதல் நடத்தினர். இச்சுற்றி வளைப்பிற்காக நாலாபக்கங்களாலும் ராணுவத்தினர் வந்தனர். எமது தரப்பினர் பிற்பகல் 2 மணி வரை ராணுவத்தினருடன் சமர் புரிந்தனர். இராணுவத்தினருக்கு உதவியாக 4 பொம்பர் விமானங்களும், ஒரு ஹெலிகொப்டரும் தாக்குதல் நடாத்தின எனினும் எம்மவர்களின் எதிர்த் தாக்குதல்களால் இவை பின் வாங்கின. இத் தாக்குதலின் போது இராணுவ தரப்பில் பலர் கொல்லப்பட்டனர்.

அவ்விடத்தில் இராணுவத்தினரின் உடல் பாகங்களும் காணப்பட்டன. ராணுவத்தினரிடம் இருந்து எம் 16 எறி குண்டுகளும், ஏ கே. றைபிள் ரவைக் கூடுகளும் எம்மால் கைப்பற்றப்பட்டன.

8 மணி நேர தாக்குதலின் இறுதியில் ராணுவத்தினர் பின் வாங்கினர் இத் தாக்குதலின் போது எமது தரப்பில் சேத மெதுவும் இல்லை.''

(மா)

## மரண அறிவித்தல்

### க. நாகலிங்கம்

குமரகோட்டம் கோண்டாவிலைச் சேர்ந்த கந்தர் நாகலிங்கம் 12-08-86ல் காலமானார். அன்னார் செல்லம்மாவின் அன்புக்கணவரும் தங்கராசா, இரத்தினேஸ்வரி, இராஜேஸ்வரி, நடராசா, யோகராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் கோபாலசிங்கம் சீவரத்தினம், புவனேஸ்வரி கோதைநாயகி ஆகியோரின் அன்பு மாமனும் வல்லிபுரத்தின் அன்புச் சகோதரரும் இரத்தினம்மாவின் மைத்துனரும் ஜெயமோகன் (பிரான்ஸ்), ஜெயகோபன் (கனடா) ஜெயரோகன், ஜெயபரன், ஜெயனந்தன், ஜெயவாசுகி, ஜெயகலையரசி பகீரதன், ஜெயசெளரி, ஜெய சொரூபி, பிரபாகரன், ஜெய சீதா, சசீதரன், ஜெயவாணி, தர்சினி, சுபாங்கனி, இராசதீபன், சுபோதினி, சஞ்ஜீவன், அண்ணாமலை, நாகரத்தினம், குணமணி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 13 08-86 புதன்கிழமை பி. ப. 2 மணியளவில் காரைக்கால் மயானத்தில் நடைபெறும் உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: தங்கராசா

C 4049

### நாகலிக்கம் மாணிக்கம்

நயினாதீவை சேர்ந்த நாகலிங்கம் மாணிக்கம் காலமானார். இவர் பங்கையாசினியின் அன்புக்கணவரும் கமலநாதன் (ஜேர்மனி), கமலகாந்தன், கமலேந்திரன், விஷயலட்சுமி, சத்தியவாணி, கமலதாசன், கண்ணதாசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சாம்பசிவத்தின் சகோதரரும் கனகரெத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும் ஆவர். அன்னாரின் ஈமக்கிரிகைகள் (13-8-86) இன்று புதன்கிழமை நயினாதீவில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளவும்.

(C4048) தகவல்: வே. க. த. தம்பிமுத்து.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka Under number B/1003/81 Eelanadu P. O. Box 49. Telegram, Eelanadu. Telephone 22389 24126.